
# ஜீவ
# மன்னா




## நாசியிலே சுவாசமுள்ள மனுஷனை
## நம்புவதை விட்டுவிடுங்கள்;
## எண்ணப்படுவதற்கு அவன் எம்மாத்திரம்.

ஏசாயா 2:22

நிகழ்காலத்தில் இப் பூலோகமானது 2 பேதுரு 3:10 இல் கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிற விதமாய் வரும் அப்பொழுது வானங்கள் மட, மட என்று அகன்று போம் பூதங்கள் வெந்து உருகிப் போம் பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்து போம் என பரிசுத்த பேதுரு அவர்கள் கூறியுள்ளபடி விஷேசித்த கப்பல் சிறிது நேரத்தில் அழிந்து போனது போல அழிவின் வாயில் நிற்கின்ற இந்த பூலோகத்தைக் குறித்த ஆசைகளோ தேவனின் வசனங்களை அற்பமாக எண்ணுகின்ற இவ்வாறாக அனைத்து மனிதர்களுக்கும், திடீர் அழிவு மிக அருகாமையிலேயே உண்டு என்பதை யாராலும் மறக்க முடியாது. ஏனென்றால் இயேசுகிறிஸ்து 2014ம் வருடங்களுக்கு முன்னரே இதனைக் குறித்து இது சம்பந்தமாக கூறியுள்ளார். நன்கு ஆலோசனை செய்து இன்றே இயேசுவண்டை மனந்திரும்பி வாருங்கள்.மனிதர்களது கதைகளைக் கேட்டு இந்த உலகத்தை இன்னுமாக நம்பிக்கைகொள்ளாதீர்கள். இதுவே கடைசி காலமும், உங்களுக்கு கிடைத்துள்ள அருமையான சந்தர்ப்பமுமாக இருக்கின்றது.



இயேசு துணை புரிவாராக!

ஆவிக்குரிய செய்தி
போதகர் ஏ.ஜே.ஜோசப்

# இயேசுவின் அற்புத கிரியைகள்

## 3 நிமிடத்தில் நீண்டகால வேதனையை சுகப்படுத்திய இயேசுவுக்கு மகிமையுண்டவதாக!



மாஷி நிக்சன்
ஜா~எல

ஒரு வருட காலமாக எனக்கு வயிற்றில் வேதனை இருந்தபடியால் இது சம்பந்தமாக வைத்தியச் சிகிச்சை பெற்றுக் கொண்டதோடு என் வயிற்றில் கர்ப்பப்பையும், குடல்களும் ஒன்றோடொன்று ஒட்டி காணப்படுகின்றமையால் அதற்கு எவ்வித பரிகாரமும் செய்ய முடியாத நிலையில் உள்ளதாகவும் வைத்தியர்கள் கூறினார்கள். ஆகையால் சத்திரச் சிகிச்சை மூலம் கர்ப்பப்பை அகற்றப்பட வேண்டுமெனவும் வைத்தியர்கள் தீர்மானித்தார்கள். மாத விடாய் எனக்கு முறையாக ஏற்படாத காரணத்தினால் அந்த இரத்தம் கர்ப்பபைக்குள்ளேயே தங்கி நோய்க் கிருமிகள் உருவாகியுள்ளமையால் இப்படிப்பட்ட வயிற்று வலி வருகின்றதெனக் கூறினார்கள். அது புற்று நோயாகவும் இருக்காலாமென சந்தேகப்பட்டு மேலதிக வைத்திய பரிசீலனைக்குட்படுத்தினார்கள்.

கர்ப்பப்பை சம்பந்த விஷேட வைத்தியர்கள் 6 பேருக்கு மேலாக பரீட்சித்து சொன்ன பதில் ஒரே மாதிரியாகவிருந்தது. அத்தோடு இன்னொரு குழந்தை பெற்றுக் கொள்ளும் வாய்ப்பில்லையெனவும் கூறப்பட்டது. இப்படியாக இருக்கும் வேளை 2014 வருடத்தில் ஒகஸ்ட் மாதத்தில் எனது நோயின் தாக்கம் அதிகமானது வயிற்று வலி அதிகமாகி 2 கிழமை மிகவும் வேதனைப்பட்டேன். எனது சரீரம் வீங்கி எனக்கு நேராக நிற்கவும், நடக்கவும் முடியாமல் முடங்கி இருந்தேன். இப்படி இருக்கும் போது ஒகஸ்ட் 30வது தினத்தின் இணைய வளையத்திற்கூடாக இயேசு கைவிடார் தேவ சபையின் தலைமைப் போதகர் அவர்களிடம் எனது நோயை பற்றிக் கூறி ஜெபித்துக் கொண்டேன். அவர் ஜெபிக்கும் போது என்னுடைய வயிற்றில் ஏதோ ஓடுவது போல ஒரு உணர்வு ஏற்பட்டது. 3 நிமிடத்தில் ஜெபித்ததன் பிறகு எனது சரீரத்திலிருந்த அனைத்து வேதனையும் நீங்கியது. எனது கணவருக்கும் சிறிய மகளுக்கும் எனது கையிலேயே இரவு உணவு தயாரித்தேன். நான் வைத்தியத்துறையில் பதில் தேடி கிடைக்காது. அநேக காலம் உபத்திரவப்பட்டேன். என் வேதனை தாங்க முடியாது கதறினேன். இப்பொழுது ஒரு வேதனையுமில்லை. வைத்திய பரிசோதனையின் போது இப்பொழுது உங்கள் நோய் குணமாகி விட்டதென்று கூறினார்கள்.

என்னைக் குணப்படுத்திய ஜீவனுள்ள இயேசுகிறிஸ்துவை ஸ்தோத்தரிக்கின்றேன்!

மகிமை பரிசுத்த ஆவியானவராகிய தேவனுக்கே

# ஆசிரியர் உரை

தேவ பிள்ளைகளே.

## நாட்கள் பொல்லாதவைகள் ஆகையால் விசுவாசத்தில் உறுதியாயிருங்கள்!

இயேசுகிறிஸ்துவின் இனிதான நாமத்தினால் உங்கள் அனைவருக்கும் என் அன்பின் வாழ்த்துக்கள். ஜீவ மன்னா தின தியானங்களைக் கையில் ஏந்தியுள்ள உங்களை அன்பான தேவனாகிய இயேசுகிறிஸ்து ஆசீர்வதிப்பாராக! 37 மாதங்களின் அனைத்து வெளியீடுகளையும் தயாரிப்பதிலிருந்து உங்கள் கரங்களில் கிடைக்கும் வரைக்கும் தேவன் எமக்கு அளித்த அளப்பரிய அநுக்கிரகத்திற்காக முழு மனதோடு நன்றி கூறுகின்றேன். ஜீவமன்னா வெளியீட்டுக்காரியங்களை காலத்தாமதமின்றி செய்து முடிக்கவும், பொருளாதார தேவைகளை தேவனே பரத்திலிருந்து சந்திப்பதாலும், அவருக்கே கோடான கோடி ஸ்தோத்திரங்கள்.

தேவ பிள்ளைகளே! நம்முடைய இயேசுகிறிஸ்து மத்தேயு 24இல் கடைசி காலத்தில் எவைகள் நிகழப் போகின்றது என்பதனை அப்படியே தெளிவாகக் கூறியுள்ளார். இவைகள் இப்பொழுது நடந்து கொண்டிருக்கின்றன. "நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள்." என எபேசியர் 5:16இல் எழுதியுள்ளதைப் போன்று உலகத்தில் இடம் பெறுகிறதான யுத்தங்களையும், யுத்த செய்திகளையும் நாம் கேள்விப்படுகிறோம். எமது தாய் நாட்டிலும் அநேக பிரச்சினைகளின் மத்தியிலும் விசுவாசத்தில் அசைவுறாது உறுதியான விசுவாசத்தோடு முன்னோக்கிச் செல்வோம்.

தேவ பிள்ளைகளே! எவ்வித பாகுபாடுமின்றி ஒவ்வொரு மாதமும் பெருமளவில் ஜீவ மன்னா தின தியானங்கள் அடங்கிய புத்தகங்களை பரலோக மன்னாவை ஆத்துமாவிற்கு கொடுக்கும்படியாக தயாரித்து வெளியிடுகின்றோம். இஸ்ரவேலுக்காக அனுதினமும் ஜெபியுங்கள். எண்ணெய் வளத்தை விரும்பும் பெரும்பாலான நாடுகள் பலஸ்தீனருக்கும், தீவிரவாதத்திற்கும் ஆதரவு கொடுக்கின்றன. இஸ்ரவேல் பலமிழந்து வருவதனால் கடைசி காலத்திற்கு அதிபதியான அந்திக்கிறிஸ்து வெளிப்படும் போது வேறு வழியின்றி அவனுடைய உதவியை பெறும்படி அவனை நாட ஆரம்பிப்பார்கள். நாம் இந்தக் காலத்தை பிரயோஜனப்படுத்தி கர்த்தருக்கான வழியை ஆயத்தப்படுத்துவோம். இயேசுகிறிஸ்துவின் நித்திய ஜீவனை சகல ஜாதி ஜனங்களும் பெற்றுக் கொள்ளும்படியாக அதி தீவிரமாக எமது இலங்கை நாட்டில் செயல்படுவோம். எங்கள் ஊழியங்களுக்காக ஜெபியுங்கள். எங்கள் ஜீவ மன்னாவின் வசனங்கள் நாள்தோறும் பெலன் தருவதாக! உங்கள் அனைவரையும் தேவன் தாமே தமது பெலனினால் நிறைத்து வழி நடத்துவாராக! தேவனுடைய ஆசீர்வாதங்கள் சதாகாலங்களிலும் உங்கள் அனைவருக்கும் உரித்தாகட்டும்.

கம்பீரமாக விதைத்திடும் ஜீவ மன்னா
களிப்போடு அறுவடையைத் தந்திடும் ஜீவ மன்னா
கர்த்தரின் அன்பை பகிர்ந்திடும் ஜீவ மன்னா
களிவோடு உள்ளம் தேற்றிடும் ஜீவ மன்னா

இப்படிக்கு
இயேசு கிறிஸ்துவுக்குள்
போதகர் ஏ.ஜே.ஜோசப்
இயேசு கைவிடார் சுவிஷேசப் பணியகம்

**மன்னா வாசகர்களே TM இலக்கத்தை அனுப்ப மறந்துவிட வேண்டாம்.**

**ஜீவ மன்னா**
ஒக்டோபர் **01**
புதன்

## தேவனை விசுவாசியுங்கள் அநேக ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்வீர்கள் !

இன்றைய வேதவாசிப்பு
பரி:லூக்கா
அதி: 22 – 23

**"களங்கள் தானியத்தினால் நிரம்பும் : ஆலைகளில் திராட்சரசமும் எண்ணெயும் வழிந்தோடும்."** (யோவேல் 2:24)

தேவனால் தெரிந்துக் கொள்ளப்பட்ட எனது அருமையான வாசகர்களுக்கு, **மாதத்தின் முதல் நாளான இன்று புதிய அபிஷேகத்துடன் இம்மாதம் முழுவதுமாக நன்மையான ஈவுகளைப் பெற்று வாழ வாழ்த்துகின்றேன்.** எங்கள் தேவ பிதாவானவருக்கு செய்ய முடியாததென்று இவ்வுலகில் எதுவுமே இல்லையெனவும், **தேவன் பேரில் விசுவாசம் கொண்டால் அனைத்தும் எமக்கு கிடைக்கும் என்றும் விசுவாசிக்கின்றோம்.** அவ்வண்ணமே தேவனின் ஒரே பேரான குமாரன் இயேசுவின் நாமத்தில் நாம் எதையாகிலும் தேவனிடம் கேட்கும் வேளையில் அனைத்தும் எங்களுக்கு கிடைக்கும் என்றும் நாம் அறிவோம்.

தேவ பிள்ளைகளே! மனிதனுக்குள் தேவ பிதாவானவரில் கொள்ளும் விசுவாசம் எவ்வளவோ? அவ்வளவாக மனிதன் ஆசீர்வாதம் பெறுவான். ஆவை அனைத்திலும் முன்னேற்றத்தையும் பெற்றுக் கொள்வான். ஆகையால் தேவன் பேரில் விசுவாசம் கொண்ட மனிதன் **நாளுக்கு நாள் வாழ்க்கையில் ஆசீர்வாதங்களைப் பெற்று கொள்வான்.** இன்றைய நாளில் உங்கள் வாழ்க்கையைக் குறித்து சிந்தனை செய்து உங்கள் வீட்டிலுள்ள குறைபாடுகள், பொருளாதாரப் பிரச்சினைகளை குறித்து நீங்கள் சிந்திப்பதை தவிர்த்து விடுங்கள். உங்கள் மனக் குழப்பங்களை ஏற்படுத்தும் எண்ணங்களுக்கு இடங் கொடுக்காதீர்கள். உங்கள் வாழ்க்கைக்கு, பிள்ளைகளின் வாழ்க்கைகளுக்கு உங்கள் இல்லத்திற்கு தேவனின் ஆசீர்வாதம் இல்லையென சொல்லி **உங்கள் எதிராளியான சாத்தானுக்கு உங்கள் மனதில் கலக்கத்தை உண்டாக்க, உங்கள் உள்ளத்தில் விரக்தியை உண்டு பண்ண இடங்கொடுக்காதீர்கள்.** நீங்கள் காண்பவைகள் அல்ல, சாத்தான் உங்களுக்கு காட்டுவதற்கு முயற்சி செய்யும் காரியங்கள் அல்ல, உலகத்தையும் அங்கே காணப்படுகின்ற **யாவையும் படைத்த, நிரவகிக்கும் பரலோகத்தில் வாசம் பண்ணும் தேவ பிதாவானவரை மாத்திரம் நீங்கள் விசுவாசத்துடன் நோக்கிக் கொண்டிருங்கள்.** ஏனென்றால் தேவன் இன்றைய நாளில் உங்களை ஆசீர்வதிப்பாரா? இல்லையா? என்பதனை நீங்கள் எவ்வண்ணமாக அறிந்து கொள்வீர்கள்.

தேவ பிள்ளைகளே! மேலே கூறப்பட்ட **யோவேல் 2:24**இல் எழுதப்பட்டுள்ளதாவது, களங்கள் தானியத்தினால் நிரம்பும் என்றாகும். அதன் கருத்து தானியங்கள் சேர்த்து வைக்கும் "கொள்களங்கள் நிரம்ப நான் ஆசீர்வதிப்பேன். அத்தோடு திராட்சரசமும், எண்ணெயும் வழிந்தோடும்படியாகவும் ஆசீர்வதிப்பேன்." என்று கூறுவதை விசுவாசிக்கின்ற எல்லோரும் **ஆசீர்வாதத்தினால் நிரம்பப்படுவீர்கள். நீங்கள் இன்று தொடக்கம் இப்படியாக விசுவாசியுங்கள்.** தேவன் உங்கள் வறுமையை முற்றாக அகற்றி நாளுக்கு நாள் உங்களை **உயர்த்தும்படியாக ஆசீர்வதிப்பாராக! இன்று வெற்றிகரமான நாள்!**

**ஜெபம்**

என் தேவனே! என்னை ஆசீர்வாதத்தினால் பெருகப் பண்ணும் தேவன் உங்கள் ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ள என் விசுவாசத்தை அதிகரியுங்கள். எனது ஆசீர்வாதங்களுக்கு தடைகளை அகற்றிப் போடும்படியாக இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"அவர்கள் விருதாவாக உழைப்பதில்லை; அவர்கள் துன்பமுண்டாகப் பிள்ளைகளைப் பெறுவதுமில்லை; அவர்களும், அவர்களோடேகூட அவர்கள் சந்தானமும் கர்த்தராலே ஆசீர்வதிக்கப்பட்ட சந்ததியாயிருப்பார்கள்."
(ஏசாயா 65:23)

ஜீவ மன்னா
ஒக்டோபர் 02
வியாழன்

**எமது வாழ்வை ஊன்றக் கட்டும் நமது இயேசுகிறிஸ்து !**

இன்றைய வேதவாசிப்பு
பரி:லூக்கா 24
பரி:யோவான் 01

**"ஆனதால் இடித்துப்போடவல்ல, ஊன்றக் கட்டவே கர்த்தர் எனக்குக் கொடுத்த அதிகாரத்தின்படி, நான் உங்களிடத்தில் வந்திருக்கும்போது, கண்டிதம் பண்ணாதபடிக்கு, நான் தூரமாயிருந்து இவைகளை எழுதுகிறேன்."** (2 கொரிந்தியர் 13:10)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! **இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்தினால் இன்றைய நாளில் சந்தோஷமாக இருக்கும்படியாக வாழ்த்துகின்றேன்.** எங்கள் தேவனாகிய இயேசுகிறிஸ்து சீடரில் ஒருவரான **பவுலுக்கூடாக மிகவும் உயர்ந்ததொரு காரியத்தை எமக்கு வெளிப்படுத்தியுள்ளார்.** இங்கு எனக்கு என்று கூறியிருப்பது, இந்த தேவ செய்தி உங்களுக்கு மாத்திரமின்றி எனக்கும் மிகவும் **முக்கியமானதும், மிக பிரயோஜனமானதுமாகும் என்றாகும்.**

தேவனுடைய பிள்ளைகளே! எங்களை தாயின் கர்ப்பத்தில் உருவாகிய நாள் முதல் இவ்வுலகில் பிறக்கும் நாள் வரை அது மாத்திரமன்று இன்றைய நாள் வரை எங்கள் சரீரம் வளர்ச்சியடைந்துக் கொண்டேயிருக்கிறது. பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் அதி சீக்கிரமாக வளர்ச்சி பெற வேண்டுமென நினைத்து பிள்ளைக்கு புரதச்சத்து, ஊட்டச்சத்துக்கள் அடங்கிய உணவுகளை கொடுப்பார்கள். அப்படியே **எங்கள் சிருஷ்டிப்பின் தேவனும் தேவனின் சொந்த பிள்ளைகளாகிய நீங்களும், நாமும் வளர்ச்சியடைவதைக் காண மிகவும் ஆவலாயிருக்கிறார்.** ஆகையால் மேற் சொல்லப்பட்ட **2 கொரிந்தியர் 13:10**இல் பவுலடியார் கூறுவதாவது, எங்களை "இடித்துப் போடவல்ல ஊன்றக் கட்டவே அவருக்கு அதிகாரங் கொடுக்கப்பட்டிருக்கின்றது" என்றாகும். விஷேடமாக தேவன் **எங்களுக்கு அரூபியாக காணப்படினும் அவர் உயிருள்ளவராய் கிரியை செய்யும் ஆவியாக எங்கள் ஆவியோடு இணைந்துள்ளபடியினால் எங்கள் ஆத்துமாவை நாளுக்கு நாள் வளரச் செய்யவும், கட்டி எழுப்பவும் கிரியை செய்கின்றார்.**

தேவ பிள்ளைகளே! எங்களை எல்லா வழிகளிலும் ஊன்றக் கட்டி எழுப்புவது தேவனின் பிரியமாக இருக்கிறது. ஆனாலும் தேவனுக்கு விரோதமாக தேவன் சிருஷ்டித்த 'பிள்ளைகளாகிய மனிதர்களுக்கு விரோதமாக கிரியை செய்கின்ற **பொல்லாத துஷ்ட சேனைகள் பலவிதமான மரணக்கண்ணிகளை, தந்திரங்களை மேற்கொண்டு மனித வாழ்வு சிதைந்து போகும்படியாக கிரியை செய்கின்றன.** ஆனாலும் நீங்கள் கலங்காதிருங்கள்! நீங்கள் தேவனுக்கு உகந்த பிரியமான வாழ்க்கை வாழ்கின்ற போது தேவன் **உங்கள் பட்சத்திலிருந்து உங்களை பாதுகாத்துக் கொள்வார்.** அப்போது யாராலும் உங்கள் வாழ்வில் குறுக்கிட்டு நிம்மதியை இழக்கச்செய்ய முடியாது. தேவன் எப்போதும் ஊன்றக்கட்டவே கிரியை செய்கின்ற தேவனாவார். **உங்களுக்கு வெற்றிகரமான நாள்!**

ஜெபம்

என் தேவனே! நீங்கள் எப்போதும் என்னை ஊன்றக்கட்ட கிரியை செய்கின்ற தேவனாகையால் ஸ்தோத்திரம். என் எதிராளியான சாத்தான் என்னை நெருக்க முயற்சி செய்கின்றான். தேவனே! என்னை பாதுகாத்துக் கொள்ளுங்கள். இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"நீங்கள் எகிப்திலிருந்து புறப்படுகிறபோது நான் உங்களோடே உடன்படிக்கைபண்ணின வார்த்தையின்படியே, என் ஆவியானவரும் உங்கள் நடுவில் நிலைகொண்டிருப்பார்; பயப்படாதேயுங்கள்."
(ஆகாய் 2:5)

ஜீவ மன்னா

ஒக்டோபர் 03

வெள்ளி

# நாம் எதிர்பார்க்காதவைகளை நிகழ்த்தும் தேவன்!

இன்றைய வேதவாசிப்பு

பரி:யோவான் அதி: 02 – 03

**"அப்பொழுது ஏசா எதிர்கொண்டு ஓடிவந்து, அவனைத் தழுவி, அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு, அவனை முத்தஞ்செய்தான்; இருவரும் அழுதார்கள்."** (ஆதியாகமம் 33:4)

அன்பான தேவ பிள்ளைகளே! தேவனின் பரிசுத்த மகா கிருபையினால் எமக்கு ஈவாகக் கொடுக்கப்பட்ட **இப்புதிய தினத்திலே அவரது ஈடு இணையில்லா, வல்லமையான, ஜீவனுள்ள பரிசுத்த நாமத்தினால் வாழ்த்துகின்றேன்.** நீங்கள் தினமும் இந்த மன்னா தியானங்களில் எழுதப்படுகின்ற செய்திகளுக்கூடாக தேவனைக் குறித்து இன்னும் அநேகக் காரியங்களை அறிந்து கொள்ள வேண்டுமென்பதே தேவனின் நோக்கமாகும். ஆகையால் இன்றைய நாளிலும் தேவன் உங்களுக்கு **புதிய காரியமொன்றை கூறுகின்றார்.**

தேவ பிள்ளைகளே! மேலே கூறப்பட்ட **ஆதியாகமம் 33:4**இல் கூறப்பட்டுள்ளதென்னவென்றால் **ஈசாக்கின் இரண்டு மகன்கள் ஏசா, யாக்கோபு.** ஈசாக்கு வயது முதிர்ந்தவனாக கண் பார்வையை இழந்தவனாக இருந்தபோது ஏசாவை கர்த்தருக்கு முன்பாக ஆசீர்வதிக்கும்படியாக அழைத்து (ஏசா வேட்டையாடுபவனாக இருந்தான்) "நான் முதிர் வயதானேன் என் மரணம் இன்ன நாளில் என்று அறியேன் நீ வனத்துக்குப் போய் எனக்காக வேட்டையாடி, அதை எனக்குப் பிரியமாயிருக்கிற ருசியுள்ள பதார்த்தங்களாகச் சமைத்து நான் புசிக்கவும், நான் மரணமடையுமுன்னே என் ஆத்துமா உன்னை ஆசீர்வதிக்கவும் என்னிடத்தில் கொண்டு வா என்றான்." ஈசாக்கின் மனைவியாகிய ரெபேக்காள் இவை அனைத்தையும் கேட்டு யாக்கோபிற்கு கூறினாள் **ஏசா வெளியில் சென்றபொழுது யாக்கோபு தனது தந்தையை ஏமாற்றி ஏசாவிற்கு உரிமையான அனைத்து ஆசீர்வாதங்களையும் உரிமையாக்கிக் கொண்டான்.** இதையறிந்த ஏசா சகோதரன் மேல் வைராக்கியம் கொண்டு என் தகப்பனுக்காகத் துக்கிக்கும் நாட்கள் சீக்கிரமாய் வரும். அப்பொழுது என் சகோதரனாகிய யாக்கோபைக் கொன்று போடுவேன் என்று ஏசா தன் இருதயத்திலே சொல்லிக் கொண்டான். இதற்குப் பயந்து யாக்கோபு வீட்டை விட்டுப் புறப்பட்டு **பதான் அராமுக்குப் போனான்.** சில காலங்களுக்குப் பிறகு **யாக்கோபு தன் சகோதரன் ஏசாவை சந்திக்க முயற்சி செய்தான்.** அவ் வேளையில் ஏசாவும்; அவனோடே கூட நானூறு மனிதரும் வந்தார்கள். அதைக் கண்டு பயமுற்ற யாக்கோபு தன்னுடைய வேலைக்காரர்களிடம் வெகுமதிகளை அனுப்பினான். ஏனென்றால் முன்பாக அனுப்புகின்ற வெகுமதிகளுக்கூடாக என் ஆண்டவனின் கண்களில் எனக்கு தயவு கிடைக்கிறதற்கு என்றான்.

தேவ பிள்ளைகளே! **ஆதியாகமம் 33:4**இன்படி சகோதரர்களுக்கிடையே நடந்த சம்பவம் யாக்கோபின் மந்திரத்தாலல்ல அல்லது, யாக்கோபின் வெகுமதிகளால் அல்ல தேவனின் தயவு கிடைக்கப் பெற்றமையினாலாகும். **உங்களுக்கும் அப்படியேயாகும். உங்கள் தந்திரங்கள், மந்திரங்கள், யோசனைகள், திட்டங்கள் அல்ல தேவனின் தயவே போதுமானது. இன்று வெற்றிகரமான நாள்!**

ஜெபம்

என் தேவனே! எனக்கு உங்களது கருணை போதுமானது, எனது யோசனை, திட்டங்கள், மந்திரங்கள் அனைத்தையும் அப்புறப்படுத்தி நான் உங்களை நோக்கி ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"...புதியவைகளையும் நானே அறிவிக்கிறேன்; அவைகள் தோன்றாததற்குமுன்னே, அவைகளை உங்களுக்குச் சொல்லுகிறேன்." (ஏசாயா 42:9)

ஜீவ மன்னா
ஒக்டோபர் 04 சனி

**எங்கள் மத்தியில் வல்லமையாக வாசம் பண்ணுகின்ற இயேசுகிறிஸ்து !**

இன்றைய வேதவாசிப்பு
பா:யோவான் அதி: 04 – 05

**"...அவர் உங்களிடமாய்ப் பலவீனரல்ல, உங்களிடத்தில் வல்லவராயிருக்கிறார்."** (2 கொரிந்தியர் 13:3)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! **ஜீவனுள்ள இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்தில், அன்புக்கும், சமாதானத்திற்கும், சுகமான வாழ்விற்கும் காரணராயிருக்கிற கர்த்தர் உங்களோடு கூட இருந்து வழி நடத்தும்படியாக வாழ்த்துகிறேன்.** பலவீனர்களான மாம்ச மனிதர்களாகிய எமக்குள் சர்வ வல்லவரின் பரிசுத்த ஆவியை வைக்கும் அளவிற்கு எங்களை அளவற்ற அன்பினால் நேசிக்கும் தேவனொருவர் எங்களோடிருப்பதனால் **இன்றைய நாளிலும் நாலும், நீங்களும் அதிர்ஷ்டசாலிகள்.** "இதோ நான் மாம்சமானயாவருக்கும் தேவனாகிய கர்த்தா" என **எரேமியா 32:27**இல் கூறியிருப்பதனால் "யாருடைய தகுதியும் பாராமல் தேவன் தேவஆவியை அனைத்து மனிதருக்கும் ஊற்றுகிறார்." **அந்த அதிர்ஷ்டத்தை நாம் பெற்றுள்ளோம்.**

தேவ பிள்ளைகளே! மேற்கூறப்பட்ட **2 கொரிந்தியர் 13:3**இல் பவுலடியார் கூறுகின்றார். "கிறிஸ்து எனக்குள்ளே பேசுகின்றாரென்பதற்கு அத்தாட்சி தேடுகிறீர்களே: அவர் உங்களிடமாய் பலவீனரல்ல. உங்களிடத்தில் வல்லவராயிருக்கிறார்" என்றாகும். ஆகையால் உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக! உங்களுக்குள் வாசம் பண்ணும் தேவ ஆவியானவர் மிகவும் வல்லமையுள்ளவரென்று விசுவாசியுங்கள். நான் எனது **30 வருட ஆத்மீக பயணத்தில் இன்று வரை ஒவ்வொரு நிமிடமும், ஒவ்வொரு நாளும் தேவ வல்லமையை உணர்கின்றேன்.** சனிக்கிழமை சுகமளிக்கும் ஆராதனையில் என்னுடைய தேவன் அவருடைய பரிசுத்த தேவ ஆவியானவரால் என்னை அபிஷேகித்து, வல்லமையால் பூரணப்படுத்திக் கூறும் தீர்க்கதரிசனங்கள், அதற்கூடாக கொடுக்கும் சுகம் காரணமாக இன்றும் தேவன் **எங்கள் மத்தியில் வல்லமையாக வாசம் பண்ணுகிறார் என்பது உறுதிப்படுத்தப்படுகின்றது.**

தேவ பிள்ளைகளே! எந்தவொரு மனிதனும் 3 நாட்கள் எந்த விதமான உணவும் உட்கொள்ளாதிருந்தால் அந்த மனிதனது சரீரமானது பலவீனமடைந்து விடும். ஆனாலும் **நான் உபவாசத்திலும், ஜெபத்திலும் தரித்திருந்து சுகமளிக்கும் ஆராதனையின் போது மேலதிக பெலத்தோடு, வல்லமையோடு செயற்படுகின்றேன்.** நீங்களும் அவ்வண்ணமாக வல்லமையாக வேண்டும். தேவ ஊழியம் செய்யும் போது மாத்திரமின்றி தேவன் எப்பொழுதும் எங்களுக்குள் வல்லமையாக இருக்கின்றார். நீங்கள் **ஜெபத்திலே தேவனுடன் நெருங்கிச் ஜீவியுங்கள். உங்கள்** அந்தரங்க வாழ்வின் பிரச்சினைகளை இயேசுவிடம் பகிர்ந்து கொள்ளுங்கள். அந்தரங்க வாழ்வையும் தேவன் அறிவார். எம்மைக் குறித்து சகல காரியங்களையும் அறிந்த தேவனோடு தாவீதைப் போன்று நெருக்கத்திலும், இடறிலிலும் அவரையே சார்ந்து வாழ்ந்து வருகின்ற போது எமக்குள் வல்லமையான காரியங்களை தேவன் நடத்துவார். **இன்று வெற்றிகரமான நாள்!**

ஜெபம்

என் தேவனே! நீங்கள் வல்லமையானவர் நீங்கள் பரிசுத்த ஆவியானவராக வாசம் பண்ணுவதால் ஸ்தோத்திரம்! உங்களை ஜெபத்தில் நெருங்கி கிட்டிச் சேர்ந்து வாழ உதவி செய்யுங்கள்.

இயேசுவின் நாமத்தில் ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"நான் உன்னை எகிப்து தேசத்திலிருந்து அழைத்துவந்ததுமுதல் உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிறேன்; ஆகையால் நீ என்னையன்றி வேறே தேவனை அறியவேண்டாம்; என்னையன்றி இரட்சகர் ஒருவரும் இல்லை." (ஓசியா 13:4)

**ஜீவ மன்னா**

ஒக்டோபர் **05** ஞாயிறு

## உங்கள் பலவீனங்களில் தேவ வல்லமை உங்களுக்குள் பூரணமாகும் !

இன்றைய வேதவாசிப்பு

பரி:யோவான் அதி: 06 – 07

**"அதற்கு அவர்: என் கிருபை உனக்குப்போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார்..."** (2 கொரிந்தியர் 12:9)

என் பிரியமுள்ள தேவ பிள்ளைகளே! தேவனின் மகா கிருபையினால் **எமக்கு ஈவாகக் கொடுக்கப்பட்ட இன்றைய தினமதிலும் இயேசுவின் வல்லமையான நாமத்தில் வாழ்த்துகின்றேன்.** உலகில் ஞானவான்கள், கல்விமான்கள், புத்திமான்கள் ஆகிய மனிதர்கள் எவ்வளவாக வாழ்ந்திடினும் **பரிசுத்த வேதாகமத்தை வாசித்து அதில் புதைந்துள்ள கருத்துக்களை அறிந்துக் கொள்ள முற்படுவதில்லை.** ஏனென்றால் மனிதர்கள் அவர்களது "மாம்ச ஞானத்தில் அல்லது அறிவாற்றலில் தேவ இராஜ்யத்தைக் குறித்தும், தேவனாகிய கர்த்தரைக் குறித்தும் எதையுமே புரிந்துக் கொள்ளவோ, கற்றுக் கொள்ளவோ முடியாதென்பது வேத வசனத்தில் எழுதப்பட்டுள்ளது."

தேவ பிள்ளைகளே! உங்களை மனிதர்களின் மத்தியில் தேர்ந்தெடுத்து வேறுபடுத்தி அவரது பிள்ளையாக உங்களை மாற்றி, தேவன் தேவ ஆவியானவரைத் தந்து தேவ இராஜ்யத்தைக் குறித்தும், தேவனாகிய கர்த்தரைக் குறித்தும் உங்களுக்கு அதிகமானவைகளை கற்பித்தருளுவாராக. உங்களுக்கு அந்த ஆவிக்குரிய காரியங்களை விளங்கிக் கொள்ள தேவனின் ஞானத்தில் உங்களை பூரணப்படுத்துவாராக. ஆகையால் உலக ஞானம் அறிவுத்திறன், விளக்கங்கள் உங்களுக்கு இல்லாவிடினும் **அதை விட உயர்ந்த, விலை மதிப்பான தேவனின் உயர்ந்த ஞானம், அறிவுத்திறன் என்பவைகளில் நீங்கள் நிறைந்திருப்பீர்களாக.** ஆகையால் நீங்கள் பலவீனனில்லை. உங்கள் தேவன் இன்றும் உங்களுக்குக் கூறுவது, தேவனின் கிருபை உங்களுக்கு போதுமானது என்பதையாகும். ஏனெனில் "உங்கள் பலவீனத்தில் தேவனின் பெலன் உங்களுக்குள் பூரணமாய் விளங்கும் என்பதை தேவன் எங்களுக்குள் வெளிப்படுத்தியுள்ளார்." ஆகையால் நீங்கள் பெலவீனமான மனிதன் என்று யாரும் உங்களை ஒரு போதும் குறை கூறி செயல்பட முடியாது. உங்களைக் குறித்ததான பலவீனங்களை மறந்து விடுங்கள்.

தேவ பிள்ளைகளே! பவுலடியார் அவரது சரீரத்தில் அவருக்கு உபத்திரவத்தைக் கொடுத்த **ஒரு மாம்ச பலவீனத்தைக் குறித்து மூன்றுமுறை ஜெபம் பண்ணினார்.** தேவன் அதை அவரது மாம்சத்தினின்று அகற்றி, தேவனுடைய பலம் அவருக்கு போதுமானது என்றும், அவருடைய பலவீனத்தில் "என் பலம் பூரணமாய் விளங்குமென்றும் கூறுகின்றார்." ஆகையால் **உங்கள் உள்ளம் கலங்காதிருக்கட்டும்!** அந்த பலவீனத்தோடு பவுலடியார் அவர்கள் ஆத்மீக பயணத்தில் முன்னோக்கி ஓடி வெற்றி பெற்றதைப் போன்று எங்கள் **ஆத்மீக பயணத்தில் வெற்றி பெற தேவன் எங்களோடு இருப்பாராக!** தேவனின் கிருபை இன்றும் மாறாததாகும். இன்று உங்கள் பெலவீனங்களில் தேவன் பெலன் தந்து வெற்றிகரமான நாளாக மாற்றுவார். **வெற்றிச் சிறந்த நல் நாள்!**

**ஜெபம்**

என் தேவனே! பவுலடியாருக்கு போன்று இன்று உங்கள் கிருபை எனக்கு போதுமானது. என் வாழ்வில் அனைத்து பலவீனங்களின் போதும் உங்கள் வல்லமையில் என்னை நிறைத்து என்னை முன்னோக்கிக் கொண்டு செல்லுங்கள். இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"நான் அவர்களைக் கர்த்தருக்குள் பலப்படுத்துவேன்; அவர்கள் அவருடைய நாமத்திலே நடந்துகொள்ளுவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்." (சகரியா 10:12)

ஜீவ மன்னா

ஒக்டோபர் **06**
திங்கள்

கர்த்தரைத் தேடுங்கள்
அவர் நாமத்தை
நம்பியிருங்கள்
வெற்றி பெறுவீர்கள் !

இன்றைய
வேதவாசிப்பு

பரி:யோவான்
அதி: 08 – 09

**"கர்த்தாவே, உம்மைத் தேடுகிறவர்களை நீர் கைவிடுகிறதில்லை; ஆதலால், உமது நாமத்தை அறிந்தவர்கள் உம்மை நம்பியிருப்பார்கள்."**
(சங்கீதம் 9:10)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! எம்மை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருமான ஜீவிக்கின்ற **இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்தில் இன்றைய நாள் நலமிகு நாளாகும்படியாக வாழ்த்துகின்றேன்.** உலகில் வாழ்கின்ற அனைத்து மனித ஜாதிகளின் மத்தியில் நீங்கள் இப்போதும் ஜீவிக்கின்ற இயேசுவைக் குறித்து தெரிந்து அறிந்து கொண்டு அவர் பேரில் முழு உள்ளத்தோடு விசுவாசங் கொண்டு தேவனின் கருணையும், அநுக்கிரகமும் குறைவின்றி பெற்றுக் கொள்வதனால் மனிதனுடைய வாழ்விற்கு சொந்தமான, **உன்னதமான வரப்பிரசாதம் உங்களுக்குக் கிடைத்துள்ளது. ஆகையால் உங்கள் வாழ்க்கையில் எந்தவித காரியத்தினையும் குறித்து கவலைக் கொள்ள அவசியமேற்படாது.**

தேவ பிள்ளைகளே! மேற்குறிப்பிட்ட **சங்கீதம் 9:10**இல் பிரதான வேதாகம வசனத்தில் குறிப்பிடபடுகின்றதாவது, **கர்த்தாவே உம்மைத் தேடுகிறவர்களை நீர் கைவிடுகிறதில்லை** ஆதலால் உமது நாமத்தை அறிந்தவர்கள் உம்மை நம்பியிருப்பார்கள் என்றாகும். அங்கே நம் விஷேடமாகக் காண்பது தேவனாகிய கர்த்தர் பேரில் விசுவாசம் கொண்டு அவரை **முழு உள்ளத்தோடு தேடுவோரை தேவன் ஒரு போதும் கைவிடமாட்டார் என்றாகும்.** அப்படியாக எழுதியிருப்பது உங்களைக் குறித்தல்லவா? நீங்கள் ஒரு முறை சிந்தித்துப் பாருங்கள். அப்படியே உங்கள் சிருஷ்டிப்பின் தேவ பிதாவை பற்றி தெரிந்துக் கொண்டு உங்கள் வாழ்வை தேவனுக்கு ஒப்புக் கொடுத்த பின் நீங்கள் மீண்டுமாக கடந்தகால உங்கள் வாழ்வைக் குறித்தும், உங்கள் எதிர் காலத்தைக் குறித்தும் உள்ளத்தில் **ஒரு சுமையை ஏற்படுத்திக் கொள்ள அவசியமில்லை.** ஏனென்றால் உங்கள் வாழ்வைக் குறித்து பூரணமான பொறுப்பை தேவன் ஏற்றுக் கொண்டார். அப்படியே **புலம்பல் 3:38**இல் எழுதப்பட்டுள்ளதாவது, "உன்னதமானவருடைய வாயிலிருந்து தீமையும், நன்மையும் புறப்படுகிறதில்லையோ" என்றாகும்.

தேவ பிள்ளைகளே! ஆனாலும் **உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக!** உங்கள் படைப்பின் தேவன் உங்கள் வாழ்வை பூரணமாக பொறுப்பேற்றுக் கொண்டிருப்பதனால் உங்களுடைய நன்மைகளை நினைத்து செயல்படுபவராக இருக்கிறார். நீங்கள் தொடர்ந்து பிழைகளைச் செய்துக் கொண்டு கீழ்படியாவிடின் உங்களைத் தண்டித்து, உங்களை உடனே **மனந்திரும்ப தேவன் கிரியை செய்வார்.** அவர் ஆபத்தேற்படுவதற்கு அனுமதிப்பதும் உங்கள் ஆபத்தின் போது நீங்கள் அவரை தேடி மீண்டுமாக அவரண்டை வருவீர்கள் என நினைத்தேயாகும். ஆகையால் உங்களுக்கு பிரச்சினைகள், ஆபத்து ஏற்படின் தேவனைக் குறை கூறாமல் உங்கள் வாழ்வில் காணப்படுகின்ற **பிழைகள், குறைகள் ஆகியவற்றை திருத்திக் கொண்டு இன்னும் அதிகமாக அவரண்டை கிட்டிச் சேர்ந்து முழு அன்போடும் விடாமுயற்சியோடும் அவரைத் தேடுங்கள். வெற்றி பெறும் நாள்!**

ஜெபம்

என் தேவனே! நான் உங்களைத் தேடினால் எனக்குள் காணப்படுகின்ற குறைகள், பிழைகள் என்பவற்றை நீங்கள் அறிந்து கொள்வீர்கள் ஆனாலும் என்னையே நான் உங்களுக்கு அர்ப்பணிக்கின்றேன். உங்கள் விருப்பத்தின்படி என்னை உருவாக்குங்கள். இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"கர்த்தர் தம்முடைய ஜனத்தை நெகிழவிடாமலும், தம்முடைய சுதந்தரத்தைக் கைவிடாமலும் இருப்பார்."
(சங்கீதம் 94:14)

ஜீவ மன்னா
ஒக்டோபர் 07
செவ்வாய்

# உங்கள் நீதியினால் உங்கள் ஆத்துமா தப்புவிக்கப்படும் !

இன்றைய வேதவாசிப்பு
பரி:யோவான்
அதி: 10 – 11

**"...தங்கள் நீதியினால் தங்கள் ஆத்துமாக்களை மாத்திரம் ...தப்புவிக்கமாட்டார்கள் என்று என் ஜீவனைக்கொண்டு** சொல்லுகிறேன்..." (எசேக்கியேல் 14:20)

அருமையான தேவ பிள்ளைகளே! **இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் இன்றைய நாள் உங்களுக்கு சந்தோஷமான நாளாக இருக்கும்படியாக வாழ்த்துகின்றேன். "பாவத்தின் சம்பளம் மரணம்"** என **ரோமர் 6:23**இல் கூறப்பட்டுள்ளது. அப்படி கூறியிருக்கிற பரலோக தேவ பிதாவானவர் மனித உருவில் உலகிற்கு வந்து எங்கள் பாவத்திற்கான விலைக்கிரயமான மரணம் எனும் தண்டனையின்று எங்களை மீட்டுக் கொண்டதை விசுவாசிக்கும் போது அவரது சரீரத்திலிருந்து பெருக்கெடுத்த **பரிசுத்த இரத்தத்தில் எங்கள் அனைத்து பாவங்களின்று நாம் பரிசுத்தப்பட்டு பாவிகள் என்ற நாமத்திற்கு பதிலாக நீதிமான்கள் என்ற நாமத்தைப் பெற்றுக் கொள்கிறோம்.**

தேவ பிள்ளைகளே! நீங்கள் இயேசுவைக் குறித்து விசுவாசிக்கும் போது நீங்கள் நீதிமானாகுவது, நீங்கள் இயேசுவோடு சிலுவையில் மரித்து மீண்டுமாக அவர் மரித்தோரிலிருந்து எழுந்த வேளை நீங்களும் அவரோடு மரித்து எழுந்து **உங்கள் வாழ்வில் பழையவைகள் ஒழிந்து போக அனைத்திலும் புதியவராக மாறி இருப்பதனாலாகும்.** ஆகையால் **நீங்கள் அதிர்ஷ்டக்காரர்கள்!** ஆனாலும் **எசேக்கியேல் 14:20**இல் தேவன் எமக்குக் கூறுவது நாங்கள் எங்கள் நீதியினால் எங்கள் ஆத்துமாவை மாத்திரம் தப்புவிக்க முடியும் என்பதாக எழுதப்பட்டுள்ளது. அதன் கருத்தானது நீங்கள் ஆத்மீக பிள்ளையானதால் உங்கள் ஆபத்து நாளில் உங்கள் **ஆத்துமாவை தேவன் தப்புவிப்பார்** என்று ஆகும். அது நீங்கள் நீதிமானான பிள்ளையாக இருப்பதனாலாகும். ஆனாலும் **உங்கள் வீட்டாரைக் குறித்து சற்று சிந்தியுங்கள்.**

தேவ பிள்ளைகளே! மேலே கூறப்பட்ட அந்த வசனத்தில் பிற்பகுதியில் நாங்கள் நீதிமானாய் வாழ்வதன் மூலம் எங்கள் சந்ததியின் ஆத்துமாக்கள் தப்புவிக்கப்படமாட்டாது. நீங்கள் நீதிமானானது போல, **உங்கள் வீட்டாரும் நீதிமான்களாக்கப்பட வேண்டும்.** நான் பரிசுத்த வழியில் நடக்கின்றேன். நான் நல்லவன் என்றோ, அவர்கள் கெட்டவர்கள் அநீதியான வழியில் நடக்கிறவர்கள் என்றோ அவர்களை குறையாக நினைக்காதீர்கள். உங்கள் மூலமாக அவர்கள் இரட்சிக்கப்பட வேண்டியது உங்கள் பொறுப்பாகும். இயேசுவுக்காக அவர்கள் மூலமாக **நிந்தை அவமானப்படுகிறீர்களா? கவலைப்படாதீர்கள்.** உங்கள் அன்பால் அவர்களது உள்ளத்தை வென்று நீங்கள் வெற்றி பெற இயேசு **உங்களுக்கு உதவி புரிவாராக! ஜெயம் தரும் நாள்!**

ஜெபம்

என் தேவனே! இயேசுகிறிஸ்துவின் மூலமாக என்னை நீதிமானாக்குங்கள். எனக்கு ஆபத்து நேரிடுகையில் என் நீதி என்னை மீட்டுக் கொள்ளும் என் நீதியை காத்துக் கொள்ள எனக்கு உதவி செய்யுங்கள்.
இயேசுவின் நாமத்தில் ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"பாவஞ்செய்கிற ஆத்துமாவே சாகும்; குமாரன் தகப்பனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதுமில்லை, தகப்பன் குமாரனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதுமில்லை; நீதிமானுடைய நீதி அவன்மேல் தான் இருக்கும், துன்மார்க்கனுடைய துன்மார்க்கமும் அவன்மேல்தான் இருக்கும்." (எசேக்கியேல் 18:20)

ஜீவ மன்னா

ஒக்டோபர் 08 புதன்

# பரலோக தேவன் உங்களோடு இருக்கிறார்!

இன்றைய வேதவாசிப்பு

பரி:யோவான் அதி: 12 – 13

**"...ஒரு யூதனுடைய வஸ்திரத்தொங்கலைப் பிடித்துக்கொண்டு: தேவன் உங்களோடே இருக்கிறார் என்று கேள்விப்பட்டோம்; ஆகையால் உங்களோடேகூடப் போவோம் என்று சொல்லி, அவனைப் பற்றிக்கொள்வார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் என்றார்."** (சகரியா 8:23)

அருமையான தேவ பிள்ளைகளே! கர்த்தரும் நம் தேவனுமாகிய **இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்தினால் இன்றும் மகிழ்ச்சிகரமான நாளாகும்படியாக வாழ்த்துகின்றேன்.** இதோ உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்று கூறிய இயேசுகிறிஸ்து இன்றும் எங்களோடு கூட இருந்து **யார் உங்களைக் கைவிட்டாலும் யாரும் இல்லாது நீங்கள் தனிமையில் ஜீவித்தாலும், கலங்காதீர்கள்! ஏனென்றால் அன்பான தேவன் உங்களோடு இருக்கின்றார் என்று கூறுகின்றார்.**

தேவ பிள்ளைகளே! எங்கள் ஆத்மீக பயணமானது விசுவாசத்தோடு செல்லும் பயணமேயாகும். எனது **30 வருட ஆத்மீக பயணத்தில் நான் பெற்ற அநுபவங்கள் அநேகமானவைகளாவதோடு ஆச்சரியமானவைகளாகவும் இருக்கின்றது.** அவை அனைத்தும் எனது விசுவாசத்தினால் நான் பெற்றவைகளாகும். நீ விசுவாசித்தால் தேவ மகிமையைக் காண்பாய் என்ற வேத வசனத்தில் காண்கிறோம். ஆகையால் பரலோகத்தில் வாசம் பண்ணுகின்ற ஜீவிக்கின்ற தேவன் தேவ ஆவியானவராக எங்கள் இருதயத்துக்குள் வாசம் பண்ணுகிறார் என்பதை **நாம் விசுவாசிப்போமானால் தேவன் எங்களோடும் இருப்பார்.** மேற் கூறப்பட்ட **சகரியா 8:23**இல் தேவனானவர் எம்மோடு இருப்பதனால் மனிதர்கள் எம்மை பற்றிக் கொண்டு தேவனிடம் வருவார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனாலும் **பரலோகத்தின் தேவனானவர் பூலோகத்தின் வாழ்கின்ற மனிதர்களோடு இருப்பது ஏன்?** என நீங்கள் சிந்திக்கலாம். ஆனாலும் **உங்கள் உள்ளம் கலங்காதிருக்கட்டும்!** தேவன் சர்வ வல்லவரான தேவனாக இருப்பினும் எங்களோடு கூட இருப்பது எங்களை அதிகமாக நேசிப்பதினாலாகும்.

தேவ பிள்ளைகளே! பரலோக தேவன் உங்களோடு இருக்கும் போது உங்கள் வாழ்வை அவர் பாதுகாத்து உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆகாயத்திற்கு கீழே இருக்கும் **யாவும் தேவனுக்கு சொந்தமானதென்பதால் உங்களுக்கு பிரியமானவைகளை உங்கள் மன விருப்பத்தின்படி வாய்க்கப்பண்ணுவார்.** அது மாத்திரமின்றி உங்கள் குணநலன்களைக் கூட திருத்தியமைத்து உங்களை நல்ல தேவ பிள்ளையாக்குவார். அப்பொழுது உங்களைக் காண்கின்ற உலக மனிதர்கள் தேவன் உங்களோடிருப்பதை விசுவாசித்து உங்களைப் பற்றிக் கொள்வார்கள். **பரலோக தேவனின் ஆசீர்வாதங்களைப் பெற்று கொள்ளும் உண்மையான அதிர்ஷ்டசாலியாவீர்கள். அத்தோடு அதிகாலையில் தேவனின் முகத்தை தேட மறந்துவிடாதீர்கள்.** சுகம், சந்தோஷம், சமாதானம் தருகின்ற தேவன் உங்களோடு இருப்பராக! **வெற்றிகரமான நாள்!**

ஜெபம்

என் தேவனே! நீங்கள் என் அன்பான தேவன் . உங்கள் மைந்தனாக எனக்கு பரிந்து பேசுகிறவராக இருப்பதனால் ஸ்தோத்தரிக்கின்றேன். தேவ ஆவியானவராக என் இருதயத்திற்குள் வாசம் பண்ணுவதால் ஸ்தோத்திரம் இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"உன் தேவனாயிருக்கிற கர்த்தராகிய நான் உன் வலதுகையைப் பிடித்து: பயப்படாதே, நான் உனக்குத் துணைநிற்கிறேன் என்று சொல்லுகிறேன்." (ஏசாயா 41:13)

ஜீவ மன்னா

ஒக்டோபர் 09

வியாழன்

# இனி கர்த்தரே உங்களுக்கு நித்திய வெளிச்சமாயிருப்பார் !

இன்றைய வேதவாசிப்பு

பரி:யோவான் அதி: 14 – 15

**"...அவர்களுக்கு முன்பாக இருளை வெளிச்சமும், கோணலைச் செவ்வையுமாக்குவேன்; இந்தக் காரியங்களை நான் அவர்களுக்குச் செய்து, அவர்களைக் கைவிடாதிருப்பேன்."** (ஏசாயா 42:16)

அன்புமிகு தேவ பிள்ளைகளே! **ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்தில் புதிதான கிருபையிலே கிடைக்கப் பெற்ற இந்நாளின் காலைப் பொழுதில் உங்களை வாழ்த்துகின்றேன்.** அனைத்து இலங்கையில் வாழ் மக்களின் மத்தியில் நீங்கள் மிகவும் அதிர்ஷ்டசாலிகள்! ஏனென்றால் சர்வபராக்கிரமுள்ள தேவனின் மைந்தனான இயேசுகிறிஸ்துவின் தெரிந்துக் கொள்ளுதலின் மூலமாக பரலோகத் **தேவனின் சொந்த தேவ பிள்ளைகளாகுவதற்கு உங்களுக்கு அவரது உன்னதமான அழைப்பு கிடைக்கப் பெற்றுள்ளது.**

தேவ பிள்ளைகளே! **ஏசாயா 42:16**இல் எழுதியுள்ளபடி இருளை வெளிச்சமாக்கும் **தேவன் உங்களோடு இருக்கிறார்.** உலகில் சூரியன் உதிப்பதோடு உலகில் காணப்படுகின்ற இருளானது அகன்று சூரியனின் வெளிச்சத்திற் கூடாக உலகம் வெளிச்சமாகின்றது. அவ்வண்ணமே **எங்கள் இயேசுகிறிஸ்து இவ்வுலகிற்கு வெளிச்சமாக அவதரித்தார்.** தேவ பிள்ளையான நீங்கள் இன்றைய நாளில் முகங்கொடுக்க வேண்டிய **பிரச்சினைகள், துன்பங்கள், உபத்திரவங்கள்** காரணமாக நீங்கள் **இன்னும் புலம்பிக் கொண்டு ஜீவிக்கின்றீர்களா?** ஆனாலும் உள்ளம் கலங்காதிருங்கள்! உங்கள் தேவன் வெளிச்சத்தின் தேவன் என்பதால் உங்கள் வாழ்வில் காணப்படுகின்ற அனைத்து இருளையும் நீக்கி, **உங்கள் வாழ்வை முற்றும் முழுவதுமாக வெளிச்சமாக்குவார்.**

தேவ பிள்ளைகளே! உங்கள் பிரச்சினைகள் எதுவாக இருப்பினும் நீங்கள் அவைகளைக் குறித்து **எண்ணாது மனதை சோர்வாக்கிக் கொள்ளாதீர்கள்.** அது உங்களுக்கு பெரிய பிரச்சினையாயினும் அது தேவனின் முன்னாலே பெரிதல்ல. அந்த பிரச்சினையின் காரணமாக **உங்கள் வாழ்க்கை இருளானது என எண்ணாதீர்கள்.** ஏனென்றால் அதை ஒரு நொடியில் நீக்க தேவனால் கூடும். ஆனாலும் உங்கள் உள்ளம் விரக்தியடையும் போது உங்கள் வாழ்வு முழுவதும் இருளாய் தோன்றும் அப்போது **தைரியத்தை இழந்து போகாதீர்கள்.** முதலாக உங்கள் உள்ளத்தில் தோன்றுகிற இருளான எண்ணங்களை அகற்றுவீர்களானால் தேவன் உங்கள் **முழு வாழ்வையும் வெளிச்சமாக மாற்றுவார்.** தேவ பிள்ளைகளே! உங்களுடைய பிரச்சினை நேரங்களிலே கர்த்தர் தம்முடைய சிறகுகளாலே உங்களை மூடி பாதுகாத்துக் கொள்ள ஆவலுள்ளவராயிருக்கிறார். போராட்ட நேரங்களில் **பயந்து வேறு எங்கும் ஓடாதிருங்கள்.** யாரும் சேரக் கூடாத ஒளியில் வாசம் பண்ணுகின்ற தேவனின் ஒளியை வாழ்வில் பெற்றுக் கொள்ளுங்கள். **வெற்றிகரமான நாள்**!

ஜெபம்

என் தேவனே! இவ்வுலகிற்கு ஒளியைப் படைத்த தேவன் நீரே! அப்படியே தேவ குமாரனாக மனித வாழ்வில் ஒளியைக் கொடுக்கிற தேவனும் நீரே! நீங்கள் என் வாழ்வை வெளிச்சமாக்குங்கள்.

இயேசுவின் நாமத்தில் –ஆமென்–

வேத வாக்குத்தத்தம்

"இனிச் சூரியன் உனக்குப் பகலிலே வெளிச்சமாயிராமலும், சந்திரன் தன் வெளிச்சத்தால் உனக்குப் பிரகாசியாமலும், கர்த்தரே உனக்கு நித்திய வெளிச்சமும், உன் தேவனே உனக்கு மகிமையுமாயிருப்பார்." (ஏசாயா 60:19 )

ஜீவ மன்னா

ஒக்டோபர் **10** வெள்ளி

# இயேசுகிறிஸ்துவின் சீஷனாக இருப்பவன் பாக்கியவான் !

இன்றைய வேதவாசிப்பு

பரி:யோவான் அதி: 16 – 17

**"உவமைகளினாலேயன்றி அவர்களுக்கு ஒன்றும் சொல்லவில்லை; அவர் தம்முடைய சீஷரோடே தனித்திருக்கும் போது, அவர்களுக்கு எல்லாவற்றையும் விவரித்துச்சொன்னார்."** (பரி:மாற்கு 4:34)

தேவனுக்குள் பிரியமான அன்பு தேவ பிள்ளைகளே! கர்த்தருடைய கிருபையால் கிடைத்த ***இப்புதிய நாளில் உங்களை ஆவிக்குரிய ஜீவியத்தில் கனி கொடுப்பவர்களாய் மாற்றும்படியாக ஜீவிக்கின்ற இயேசுவின் வல்லமையான நாமத்தில் வாழ்த்துகின்றேன்.*** ஜீவனுள்ள தேவனை விசுவாசித்து, உங்கள் இருதயத்தில் வாசம் பண்ண இடமளித்த ***நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்!*** ஏனெனில் தேவன் மனித உருவில் ***உலகில் அவதரித்து அவரது வாழ்வை பலியாக அர்ப்பணித்தார்.*** மீண்டுமாக மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்து பரலோகம் சென்று பரிசுத்த தேவ ஆவியானவராக எங்களுக்குள்ளாக எமது இருதயத்தில் வாசம் பண்ணுகிறார். ஆகையால் நீங்கள் இயேசுவே! எனக் கூறினாலும், பரிசுத்த ஆவியானவரே! எனக் கூறினாலும் ***அவர் உங்களோடு இருப்பார்.***

தேவ பிள்ளைகளே! ***உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக!*** இயேசுகிறிஸ்து மனிதர்களுக்கு பரலோகத்தைக் குறித்தும், பிதாவானவரைக்குறித்தும் கற்பிக்கும் போது அநேக சந்தர்ப்பங்களின் போது ***அவர்களுக்கு உவமைகளால் விளக்கிக் கூறினார்.*** மேற் குறிப்பிட்ட ***பரி.மாற்கு 4:34***இல் குறிப்பிடப்படுகின்றதாவது அவர் தனது சீஷர்களோடு தனித்திருக்கும் போது அவர்களுக்கு எல்லாவற்றையும் விவரித்துச் சொன்னார் என்று நீங்கள் நினைக்க முடியும், ஆனாலும் நீங்கள் அப்படியாக எண்ணாதிருங்கள். ஏனென்றால் இயேசுகிறிஸ்து ***பரி.யோவான் 13:34***இல் எங்களுக்கு கூறியிருப்பது "நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருங்கள்." நான் உங்களில் அன்பாயிருக்கிறது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்கு கொடுக்கிறேன் என்பதாக எழுதப்பட்டுள்ளது. ***பரி.யோவான் 13:25***இல் ***"நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால் அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துக் கொள்வார்கள்."*** என்று கூறியிருக்கிறார்.

தேவ பிள்ளைகளே! இயேசுகிறிஸ்து உங்களுக்கு அன்பு செய்தது போல நீங்களும் ஒருவருக்கொருவர் அன்பு செய்வீர்களானால் நீங்கள் இயேசுவின் சீஷர்களாவீர்கள். அன்று ***தேவனுக்கு மிக சமீபமாகவிருந்த சொந்த சீஷர்களை தேவன் அதிகமாக நேசித்தார்.*** தேவன் அவர்களுக்கு ஒன்றையும் மறைக்காது அனைத்தையும் சொல்லிக் கொடுத்தார். நீங்கள் ***தேவனின் அன்பில் நிலைத்திருந்து தேவனின் உண்மையான சீஷனாக இருப்பீர்களெனின் உங்களையும் தேவன் அதிகமாக நேசிப்பார்.*** தேவனைக் குறித்தும், தேவ இராஜ்ஜியத்தைக் குறித்தும், உங்களுக்கும் அனைத்தை ***இரகசியங்களையும் சொல்லிக் கொடுப்பார். இன்று வெற்றிகரமான நாள்!***

ஜெபம்

என் தேவனே! இயேசுகிறிஸ்துவிடம் அழைத்து என்னை சீஷனாக்கியபடியால் ஸ்தோத்திரம். அவர் மூலமாக இன்னும் தேவ இராஜ்யத்தைக் குறித்தும், உங்களைக் குறித்தும் அதிகமாக எனக்கு கற்பியுங்கள். இயேசுகிறிஸ்துவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"ஆதலால் பிள்ளைகளே, எனக்குச் செவிகொடுங்கள்; என் வழிகளைக் காத்து நடக்கிறவர்கள் பாக்கியவான்கள்." (நீதிமொழிகள் 8:32)

ஜீவ மன்னா

ஒக்டோபர் 11 சனி

# நீங்கள் தேவ ஆவியானவர் வழி நடத்துகிற தேவனுடைய புத்திரர்கள்!

இன்றைய வேதவாசிப்பு

பரி:யோவான் அதி: 18 – 19

"மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்." (ரோமர் 8:14)

அன்புக்குரிய தேவ பிள்ளைகளே! ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்தினால் **இன்றைய நாளிலும் அருமையான நாளைப் பெற்று மகிழ்ந்திருக்குமாறு வாழ்த்துகின்றேன். இலங்கையில் வாழ்கின்ற இரண்டு கோடியே மூன்று இலட்சம் அளவிலான இலங்கையர் மத்தியில் நீங்களும், நாமும் அதிஷ்டக்காரர்களாவோம்**! ஏனெனில் முழு உலகத்தையும், படைத்து ஆளுகை செய்யும் சிருஷ்டிப்பின் தேவனின் பரிசுத்த ஆவியானவர் உங்களோடும், என்னோடும் இருப்பாராக. தேவன் எங்களோடு தங்கியிருந்து, **எங்கள் வாழ்க்கைப் பயணத்தின் பாதையில் முன்னோக்கிக் கொண்டு செல்பவாராக இருக்கின்றார்**!

தேவ பிள்ளைகளே! ஆகையால் உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக! தேவ ஆவியானவர் உங்களோடு இருப்பதனால், **நீங்கள் விஷேசித்தவர்கள்**! ஏனெனின் அப்பொழுது தேவனின் புத்திரர் ஆவீர்கள். ஏனென்றால் மேற்குறிப்பிட்ட **ரோமர் 8:14**இல் எழுதியுள்ளபடி மேலும் எவர்கள் **தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்.** ஆகையால் அந்த உன்னத வரப்பிரசாதத்தைப் பெற்றுக் கொண்ட நாம் பாக்கியவான்கள். நாங்கள் தேவனின் புத்தரர்களாகையால், **தேவன் எம்மேல் அளவுகடந்த அன்பு வைத்திருக்கிறார்.** அதுமாத்திரமன்றி எப்போதும் தேவன் எங்களோடு கூட இருக்கிறார். நாங்கள் போக வேண்டிய பாதை என்ன? என்பதை தேவன் எங்களுக்கு வழிகாட்டி எங்களை முன்நோக்கி கொண்டு செல்கின்றார். தேவன் எமக்கு கூறியிருப்பதாவது, **ஏசாயா 49:15**இல் "ஸ்திரியானவள் தன் கிர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல் தன் பாலகனை மறப்பாளோ? அவர்கள் மறந்தாலும் நான் உன்னை மறப்பதில்லை" என்றாகும்.

தேவ பிள்ளைகளே! இன்று நீங்கள் எந்நிலையில் இருந்தாலும் **நீங்கள் துக்கப்படாதீர்கள்.** நீங்கள் தேவனின் மகன் என்பதால் யாரும் உங்களை மேற கொள்ள முடியாது. உங்கள் ஆத்மீக வாழ்விற்கு தடை உண்டு பண்ணுகிற **சாத்தானின் அனைத்து கிரியைகளையும் மேற்கொள்ளும் வல்லமை உங்களுக்குள் இருக்கிறது.** உங்களை முன்னோக்கிக் கொண்டு செல்வது ஜீவிக்கின்ற தேவனின் பரிசுத்த ஆவியானவர் என்பதால் **இடைநிறுத்தவோ, தடைகளை உண்டு பண்ணவோ, உங்கள் இரட்சிப்பின் சந்தோஷத்தை உங்களிடமிருந்து திருடிக் கொள்ளவோ யாராலும் முடியாது.** ஆனாலும் நீங்கள் தேவ ஆவியானவரை துக்கப்படுத்தாமல் ஜீவிக்க வேண்டும். எனது இரட்சிப்பின் சந்தோஷம், சமாதானம், சுகம் ஆகியவற்றை திருட சாத்தானுக்கு இடங்கொடுக்க மாட்டேன். என **உறுதியோடு ஜெபம் செய்யுங்கள். வெற்றிச் சிறந்த நாள்!**

ஜெபம்

என் தேவனே! நீங்கள் என்னை உங்கள் மகனாக்கிக் கொண்டமைக்காக ஸ்தோத்தரிக்கிறேன். தேவனே! தேவ ஆவியானவருக் கூடாக என்னைக் கொண்டு செல்வதால் ஸ்தோத்திரம். இன்றும் நீங்கள் என்னை முன்னோக்கிக் கொண்டு செல்லுங்கள்.
இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"உன் தேவனாயிருக்கிற கர்த்தர் நானே, அலைகள் கொந்தளிக்கத்தக்கதாய்ச் சமுத்திரத்தைக் குலுக்குகிற சேனைகளின் கர்த்தர் என்கிற நாமமுள்ளவர்."
(ஏசாயா 51:15)

ஜீவ மன்னா
ஒக்டோபர் 12 ஞாயிறு

# உங்கள் அர்ப்பணிப்புக்களை மறவாத தேவன்!

இன்றைய வேதவாசிப்பு
பரி:யோவான் அதி: 20 – 21

**"நீர் செலுத்தும் காணிக்கைகளையெல்லாம் அவர் நினைத்து, உமது சர்வாங்க தகனபலியைப் பிரியமாய் ஏற்றுக்கொள்வாராக."** (சங்கீதம் 20:3)

தேவனின் அளப்பரிய மகா கிருபையால் புதிதான நாளைப் பெற்றுக் கொண்ட தேவ பிள்ளைகளே! **ஜீவனுள்ள இயேசுவின் வல்லமையான நாமத்தினால் உங்களை வாழ்த்துகின்றேன்.** நானும், நீங்களும் மனிதர்களுக்கு எவ்வளவாக உதவி, ஒத்தாசைகளைச் செய்த போதும் சில காலங்கள் சென்றதன் **பின் அவர்கள் அவைகளை மறந்து விடும் சந்தர்ப்பங்கள் அநேகம்.** மனிதர்கள் அப்படியாக இருந்தாலும் நமது தேவனானவர் அப்படியானவர் இல்லை என **சங்கீதம் 20:3**இல் கூறப்பட்டுள்ளது.

தேவ பிள்ளைகளே! தேவன் எமது தகனப்பலியையும் எமது காணிக்கைகளையெல்லாம் நினைவு கூறுவதாக அங்கே எழுதப்பட்டுள்ளது. ஆகையால் **உள்ளம் கலங்காதீர்கள்!** ஆனாலும் **அங்கே தகனப்பலி என்றும் காணிக்கைகளைக் குறித்தும் மாத்திரம் அங்கே எழுதப்படவில்லை.** அதன் கருத்து என்னவென்றால் நீங்கள் தேவனுக்காக தேவ இராஜ்ஜியத்திற்காக செய்கின்ற அனைத்து அர்ப்பணிப்புகளும், உங்களது நன்றிக் காணிக்கைகள் ஆகும். அது என்னவாக இருந்தாலும் தேவன் அவைகளை ஒரு போதும் மறவாத தேவனாக இருக்கின்றார். **விஷேடமாக நீங்கள் உபத்திரவத்தின் மத்தியில் உங்கள் ஆத்மீக பயணத்தைத் தொடங்குகிறீர்கள் எனின் அதுவும் நீங்கள் தேவனுக்காக செய்கின்ற ஒரு அர்ப்பணிப்பு என்றும் சர்வாங்க பலியென்றும் தேவன் ஏற்றுக் கொள்வார்.** நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களாயிருக்கிறபடியினாலே என் நமத்தினிமித்தம் உங்களுக்கு ஒரு கலசம் தண்ணீர் குடிக்கக் கொடுக்கிறவன் தன் பலனை அடையாமற் போவதில்லையென மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

தேவ பிள்ளைகளே! உங்கள் நாவில் தேவனை நீங்கள் அறிக்கையிட்டு அவரை உயர்த்தி கூறும் **விசுவாச வார்த்தைகள் அனைத்தையும் தேவன் நினைத்து அவைகளுக்கு உங்களுக்கு பலன் கொடுப்பாராக!** ஏனெனில் தேவனை விசுவாசிக்கின்ற எவரும் **ஒரு போதும் வெட்கமடையார்கள்.** தேவன் ஒரு போதும் புறம்பே தள்ளாத தேவனாகையால் உங்களால் ஏதேனும் சிறு குறைபாடுகள், பிழைகள் என்பவைகள் ஏற்பட்டாலும் உங்கள் **சகல நன்மைகளையும் மறந்து தண்டனைக்குட்படுத்தி துன்பத்தை கொடுக்காத நீதியுள்ள தேவன் அவர்.** ஆகையால் நீங்கள் சிறு குறைபாடுகளிலும், பிழைகளிலும் கூட தேவனின் அன்பை நினைத்து உங்களை சரிப்படுத்தி நேர்மையுடன் நடந்து கொள்ளுங்கள். தேவன் இன்றும் உங்கள் கிரியைகளை நினைத்து பலன் கிடைக்கச் செய்வார். **இன்றும் வெற்றிச் சிறந்த நல் நாள்!**

ஜெபம்

என் தேவனே! நீங்கள் என்னுடைய பலிகள் காணிக்கைகளை நினைக்கின்ற தேவனாகையால் ஸ்தோத்தரிக்கின்றேன்! எனது சகல அர்ப்பணிப்புக்களையும், தியாகங்களையும் நீங்கள் அறிந்தவராக இருக்கின்றீர்கள். இன்றும் அவைகளை நினைத்து என்னை ஆசீர்வதியுங்கள்! இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"அப்பொழுது கர்த்தருக்குப் பயந்தவர்கள் ஒருவரோடொருவர் பேசிக்கொள்வார்கள்: கர்த்தர் கவனித்துக் கேட்பார்; கர்த்தருக்குப் பயந்தவர்களுக்காகவும் அவருடைய நாமத்தைத் தியானிக்கிறவர்களுக்காகவும் ஞாபகப் புஸ்தகம் ஒன்று அவருக்கு முன்பாக எழுதப்பட்டிருக்கிறது." (மல்கியா 3:16)

ஜீவ மன்னா

ஒக்டோபர் **13** திங்கள்

## உங்கள் அக்கிரமங்களை மன்னித்து உங்கள் பாவங்களை நினையாத தேவன் !

இன்றைய வேதவாசிப்பு

அப்போஸ்: அதி: 01 – 02

**“இந்நாட்களில் எருசலேமுக்கும் யூதாவுக்கும் நன்மைசெய்யும்படித் திரும்ப நினைத்தேன்; பயப்படாதேயுங்கள்.”** (சகரியா 8:15)

அருமையான தேவ ஜனங்களே! **ஜீவிக்கின்ற இயேசுவின் வல்லமையான நாமத்தில் உங்களுக்கு நன்மைகள் நிறைந்த நல்ல நாளாகும்படியாக வாழ்த்துகின்றேன்.** பரிசுத்த வேதாகமத்தில் குறிப்பிட்டுள்ளபடி பழைய ஏற்பாட்டுக் காலத்தில் **அவர் சிருஷ்டித்த முதல் மனிதனது கீழ்படியாமை காரணமாக தேவனாகிய கர்த்தரின் கோபம் பற்றியெரிந்தது.** அத்தோடு தண்டனையையும் பெற்றுக் கொண்டார்கள். அவர்களது உள்ளம் மாறாதபடியினாலும் திருந்தாதபடியினாலும் அவர்கள் தண்டனை காரணமாக அழிந்து போகாத வண்ணம் தேவன் தனது கோபத்தை அடக்கி இந்த நித்திய புதிய ஏற்பாட்டின் காலத்தில் **மனிதன் பேரில் தேவன் தனது இரக்கத்தை அதிகமாக ஊற்றினார்.**

தேவ பிள்ளைகளே! தேவ பிதாவின் மகத்தான **இரக்கத்தினையும், மனதுருக்கத்தினையும்** எங்கள் பேரில் வைத்திருப்பதனால், **இயேசுகிறிஸ்துவுக்கூடாக தேவனை நெருங்கி கிட்டிச் சேர்ந்திருக்கும் நாம் பாக்கியவான்கள்!** மேற்கூறிய **சகரியா 8:15இல் எழுதியிருப்ப~தென்னவெனின் இந்நாட்களில் எருசலேமுக்கும் யூதாவுக்கும் நன்மை செய்யும்படி திரும்ப நினைத்தேன். பயப்படாதேயுங்கள்!** என்று எழுதப்பட்டுள்ளது. ஆகையால் **மனங்கலங்காதிருங்கள்!** தேவனால் படைக்கப்பட்ட ஜனங்கள் யாரும் அவர்களது தீமைகளினால் அழிந்து போவதைக் காணுவதற்கு அல்ல, அவர்கள் மனந்திரும்பி நீதிமான்களாக உலகில் ஜீவிப்பதை காண்பதே தேவனின் பிரியமாயிருக்கிறது. ஆகையால் உங்களால் இழைக்கப்படுகின்ற பிழைகள், குறைகள், இருப்பினும் தேவன் உங்களுக்கு உடனே தண்டனை கொடாமல் **உங்கள் மேல் இரக்கங் கொண்டு, நீங்கள் மனம் திரும்பும் வரை நீண்ட காலம் பொறுமையுடன் காத்திருக்கிறார்.** தேவன் எப்படியாவது மனந்திரும்ப சந்தர்ப்பங்களை உருவாக்கிக் கொடுத்து மீண்டுமாக உங்களை தேவனண்டையில் நெருங்கச் செய்து கிட்டிச் சேர்த்துக் கொள்வாராக!

தேவ பிள்ளைகளே! தேவன் உங்களை மீண்டுமாக கிட்டிச் சேர்த்துக் கொள்வதோடு மாத்திரமல்லாது மீண்டுமாக எமக்கு நன்மைகள் செய்வதற்கே தேவன் செயல்படுகின்றார். ஆகையால் **நீங்கள் தேவனின் நன்மைகளைப் பெற்று மகிழ்ந்திருப்பதே தேவனது பிரியமாயிருக்கிறது.** தேவன் ஒரு முறை உங்களுக்கு நன்மை செய்ததன் பிறகு நீங்கள் இன்னுமொருமுறை ஆத்மீகத்தில் பின்மாற்றம் அடைந்து விடுவீர்களெனிலும் **நீங்கள் அதை நினைத்து கலங்காதிருங்கள்!** ஏனென்றால் பிதாவாகிய தேவன் உங்களை புறம்பே ஒரு போதும் தள்ளுவதில்லை. மீண்டுமாக நன்மையான காரியங்களை உங்கள் வாழ்வில் பிறப்பிப்பார். **இன்று வெற்றிகரமான நாள்!**

ஜெபம்

என் தேவனே! என் வாழ்வில் ஒரு முறை நன்மைகளை பிறப்பியுங்கள். ஆனாலும் நான் மீண்டுமாக பின்மாற்றம் அடைந்தேன். நீங்கள் என்னை மன்னித்து இன்றைய நாள் வசனத்தைப் போன்று எனக்கு நன்மைகளைச் செய்யுங்கள். இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

“...நான் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன்.” (எரேமியா 31:34)

ஜீவ மன்னா

ஒக்டோபர் 14 செவ்வாய்

# உங்களைக் குறித்து உயர் திட்டங்களை வைத்திருக்கும் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு

அப்போஸ்: அதி: 03 – 04

**"என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார்."** (ஏசாயா 55:8)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! எம்மை சிருஷ்டித்தவரும், எம்மை உலகில் தெரிந்து கொண்டு உலகில் வேறுபடுத்திக் கொண்டவருமான **ஜீவனுள்ள இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் இன்றைய நாளில் நீங்கள் சுகம் பெற்று, வளம் பெற்று வாழும்படியாக வாழ்த்துகின்றேன்.** நிகழ்கின்ற இக்காலத்தில் விஞ்ஞானரீதியில் நவீன முறைகளில் முன்னேற்றம் காணப்பட்டு வருவதால் மனித செயற்பாடுகள் மிகவும் முன்னேற்றமடைந்தபடியால், மனிதன் தன்னை வருத்தி செயறபடாது பெரிய இயந்திரங்களால் செய்யப்படுகின்ற அனைத்து செயல்களையும் சிறிய **கணனி வலையமைப்புக் கூடாக மிகச் சிறப்பான முறையில் நிறைவேற்றுவதைக் காண்கிறோம்.** அப்படியே இன்றைய நாளில் உங்கள் தேவன் உங்களுக்குக் கூறுவது, **உங்கள் வாழ்க்கையின் அனைத்துத் திட்டங்களையும் அவர் நிறைவேற்றி முடித்து விட்டார்** என்றாகும்.

தேவ பிள்ளைகளே! உங்கள் பரலோக தேவ பிதாவானவர் உங்களைக் குறித்து நிறைவேற்றிய **எல்லாத் திட்டங்களையும் யாராலும் இவ்வுலகில் தடுத்து நிறுத்த முடியாது.** ஏனெனில் "தேவனை பிடித்தாலும், அவரை அடைத்தாலும், அவர் நியாயத்தில் கொண்டு வந்து நிறுத்தினாலும் அவரைத் தடை பண்ணுகிறவன் யார்"? என்று **யோபு 11:10**இல் எழுதப்பட்டிருக்கிறது. ஆகையால் **உங்களைக் குறித்ததான உயர்வான திட்டங்களை வைக்கவும், அதனை சரியான முறையில் நிறைவேற்றவும் தேவன் செயற்படுவதால் நீங்கள் அதிஷ்டக்காரர்கள்!** உங்களைக் குறித்ததான தேவனின் திட்டம் என்ன? என்பதனை நீங்கள் அறியாதிருக்கலாம். அந்த அனைத்து திட்டங்களும் மிகவும் மேலானவைகளென்றும், மிகவும் நன்மையானவைகளென்றும் நாங்கள் காண்கிறோம். ஏனென்றால் பூமியைப் பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ? அப்படியே "உங்கள் வழிகளைப் பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது" என்று இன்றைய பிரதான வேத வசனம் உரைக்கின்றது.

தேவ பிள்ளைகளே! வெளிநாடுகளிலிருந்து வரும் உல்லாசப் பிரயாணிகளை சுற்றுலா பயனங்களுக்கு அழைத்துச் செல்லும் **தனியார் நிறுவனமொன்றில் வழிகாட்டியாகவும், இடங்களைப் பற்றி மூன்று மொழிகளிலும் விபரங்களைக் கூறுபவராகவும், வாகன சாரதியாக கடமை புரிந்து வந்தேன்.** ஆனால் தேவன் தனது இராஜ்ஜியத்தைக் கட்டி எழுப்பும் தேவ ஊழியக்காரராக உயர்த்தினார். அது என்னைக் குறித்து தேவனின் உயர்ந்த திட்டமாகும். தேவனின் இப்படியான திட்டத்தை நான் அறிந்துக் கொண்டிருக்கவில்லை. **என்னுடைய எண்ணம் நான் வெளியூர் சென்று என் வாழ்வை உயர்த்திக் கொள்ள வேண்டுமென்பதே.** ஆனால் தேவனானவர் தேவ ஊழியத்திற்கு அழைத்து தேவஅடியாராக இவ்வளவாக உயர்த்தி வைத்துள்ளார். உங்களைக் குறித்தும் தேவன் மேலான திட்டங்களை வகுத்துள்ளார். **இன்று வெற்றிச் சிறக்கப்பண்ணும் நாள்!**

ஜெபம்

என் தேவனே! என்னைக் குறித்த உயர்ந்த திட்டங்களுக்காக ஸ்தோத்திரம்! ஆகையால் எங்கள் வாழ்வில் தேவனுடைய அனைத்து திட்டங்களும் நிறைவேற ஆசீர்வதியுங்கள்! இயேசுவின் நாமத்தில். –ஆமென்–

வேத வாக்குத்தத்தம்

"...என் ஊழியக்காரனே, உன்னை நான் அந்நாளிலே சேர்த்துக்கொண்டு, உன்னை முத்திரை மோதிரமாக வைப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் உன்னைத் தெரிந்துகொண்டேன் என்று சேனைகளின் கர்த்தர் உரைக்கிறார் என்று சொல் என்றார்." (ஆகாய் 2:23)

ஜீவ மன்னா

ஒக்டோபர் **15**
புதன்

## தேவ வசனமாகிய சத்தியம் உங்களை விடுதலையாக்கும் !

இன்றைய வேதவாசிப்பு

அப்போஸ்: அதி: 05 – 06

"சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார்." (பரி:யோவான் 8:32)

அன்பார்ந்த தேவ ஜனங்களே! ஜீவனுள்ள இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் அவருக்குள் வாழும் **உங்களுக்கு ஒவ்வொரு நாளும் வெற்றியுண்டு. இன்றைய நாளும் வெற்றிகரமான நாளாகும்படியாக வாழ்த்துகின்றேன்.** நித்தியகாலமும் எங்களை நேசிக்கின்ற எங்கள் வேதனைகளில் எங்களை கிட்டிச்சேர்ந்து, உதவி புரிகின்ற தேவன் தாமே பின்மாற்றத்திலும் எம்மை நெருங்கி அன்பினால் அரவணைத்து மீண்டுமாக தம்மிடம் எம்மை கிட்டிச்சேர்த்துக் கொள்ளும் **இயேசுகிறிஸ்து இன்றும் உங்களோடிருப்பதனால் உங்களைப் போன்றதொரு அதிர்ஷ்டசாலி வேறு யாருமில்லை** என நான் **உங்களுக்குக் கூறுகின்றேன்.** ஆகையால் இன்றைய நாளைக் குறித்தும், உங்கள் வாழ்க்கை காரியங்களைக் குறித்தும் மனங்கலங்காதீர்கள்!

தேவ பிள்ளைகளே! நேற்றைய தினத்தில் தேவ செய்தியானது தேவன் உங்களைக் குறித்த அனைத்து திட்டங்களையும் ஆயத்தப்படுத்தி வைத்திருக்கிறார் என்பதாகும். அவை அனைத்தையும் தேவன் ஆயத்தப்படுத்துவது எங்கள் கரங்களில் கொடுத்திருக்கும் பரிசுத்த வேதாகமத்தின் வசனத்தின்படியேயாகும். உதாரணமாக நீங்கள் தொலைக்காட்சி பெட்டியொன்றை புதிதாக வாங்கியிருக்கிறீர்கள் என்று நினைத்துக் கொள்ளுங்கள். அப்போது அதை செயற்படுத்துவதற்கு ஆலோசனைகள் அடங்கிய அவசியமான வழிக்காட்டி புத்தகமொன்று அதனோடு கொடுக்கப்படுகின்றது. அதில் காணப்படும் நிபந்தனைகளையும், செயற்பாட்டு வழிகளையும் பயன்படுத்துவதன் மூலம் தொலைக்காட்சியை இயங்கச் செய்ய முடியும். அப்படியே தேவ வசனங்களை **நன்கு வாசித்து அதின்படி செயற்படுவீர்களாயின், நடப்பீர்களாயின் எவ்வித சந்தேகமுமின்றி தேவ வசனமானது உங்கள் வாழ்வில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. ஏனென்றால் தேவ வசனத்தில் தேவனின் அனைத்து திட்டங்களும் அடங்கியுள்ளது.** அப்பொழுது உங்கள் வாழ்வில் எதிர்பாராத வண்ணமாக பெரிய திருப்பங்கள் நிகழ்ந்திடினும் அது ஏற்பட்டது ஏன்? என்று நீங்கள் அறிவீர்கள்.

தேவ பிள்ளைகளே! "அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவ பக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்" என **2 தீமோத்தேயு 3:12**இல் கூறப்பட்டுள்ளது. நீங்கள் நினையாத வேளைகளில் எதிர்பாராத பிரச்சினைகள் ஏற்படின் **நீங்கள் கலங்கித் தவிக்காது இந்த வேத வசனத்தை நினைவு கூறுங்கள்.** இயேசுகிறிஸ்து என்னை கைவிடவில்லை. என்னை மிகவும் அன்போடு கிட்டிச்சேர்ந்து ஜீவிப்பதனால் என்னை தேவனிடமிருந்து பிரிந்து வேறுபடுத்த **சாத்தான் மேற்கொள்ளும் உபாயங்கள் ஆகையால் நான் அதைரியப்படாமல் தேவனுக்குள் இப்பிரச்சினையில் வெற்றி பெறுவேன்.** பயப்படாமல் எப்பிரச்சினைகளுக்கும் முகம் கொடுப்பேன். இப்படியாக இந்த வேத வசனம் சத்தியத்தை எமக்கு கற்பிக்கின்றது. அது உங்களை விடுதலையாக்குகின்றது. **விடுதலையின் நன்நாள்!**

ஜெபம்

என் தேவனே! உங்கள் சத்தியத்தைக் கூறும் வசனங்களுக்காக ஸ்தோத்திரம்! அவைகளைக் கடைப்பிடித்து அதன்படி நான் வாழ உதவி செய்யுங்கள். உங்கள் சத்தியமான வசனத்தில் என் வாழ்வை மாற்றுங்கள். இயேசுகிறிஸ்துவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"கர்த்தர் ஞானத்தைத் தருகிறார்; அவர் வாயினின்று அறிவும் புத்தியும் வரும்." (நீதிமொழிகள் 2:6)

| ஜீவ மன்னா | அற்புத சுகம் கொடுக்கும் இயேசுவின் தெய்வீக வல்லமை ! | இன்றைய வேதவாசிப்பு |
|---|---|---|
| ஒக்டோபர் 16 வியாழன் | | அப்போஸ்: அதி: 07 – 08 |

**"அவர் அவளிடத்தில் குனிந்துநின்று, ஜூரம் நீங்கும்படி கட்டளையிட்டார், அது அவளை விட்டு நீங்கிற்று; உடனே அவள் எழுந்திருந்து அவர்களுக்குப் பணிவிடை செய்தாள்."** (பரி.லூக்கா 4:39)

தேவ பிள்ளைகளே! களி மண்ணிலிருந்து உருவாக்கி தேவ சாயலுக்கொப்பாக எம்மை உருவாக்கிய ***ஜீவனுள்ள தேவன் இயேசுகிறிஸ்துவின் வல்லமையுள்ள நாமத்தினால் இன்றைய தினம் சுபநாளாக அமையுமாறு வாழ்த்துகின்றேன்.*** "என்னால் செய்யக் கூடாத காரியம் உண்டோ" என்று விளம்பிய உயிருள்ள தேவனைக் கண்டறியவும் அவருடைய சொந்த பிள்ளைகளாகுமாறு வல்லமையை பெற்றுக் கொண்டவர்களுமான ***அதிர்ஷ்டசாலிகள் நீங்களே!*** உலகலாவியரீதியில் ஜீவிக்கும் அநேக மனிதர்கள் எமக்கு கைகொடுத்து உதவி செய்ய ஒருவரும் முன்வராதபடியால் தமது வாழ்க்கையில் அடிமட்டத்தில் இருக்கிறார்கள். இப்படியான மிகவும் பரிதாகபகரமான நிலமையுள்ளவாகளாய் இருக்கும் **இவர்களைப் போன்ற நிலமை உங்களுக்கேற்படாது.**

தேவ பிள்ளைகளே! ***நீங்கள் அனுதினமும் வித்தியாசமான, எவ்வகையிலான போராட்டங்களை சந்திக்க நேர்ந்தாலும் உங்கள் தேவனானவர் உங்களோடிருந்து உங்களுக்கு உதவி செய்கிறார்.*** ஆகையால் ***உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக!*** இன்றைய செய்தியின் முதல் ஆரம்பமே **பரி.லூக்கா 4:39**இன்படி இயேசுகிறிஸ்து கலிலேயாவில் உள்ள கப்பர் நாகூம் பட்டணத்திலே சீமோன் வீட்டிலே பிரவேசித்து கடும் ஜுரமாய் கிடந்த ***"சீமோனின் மாமியை சுகமாக்கும்படியாக அவர் அவளிடத்தில் குனிந்து நின்று ஜுரம் நீங்கும்படி கட்டளையிட அது அவளை விட்டு நீங்கிற்று."***

தேவ பிள்ளைகளே! இயேசுகிறிஸ்து தேவகுமாரனாவார். பரலோகத் தகப்பன் மூலமாய் ***எம்மை ஆசீர்வதிக்கிறார்.*** ஆகையால் இயேசுகிறிஸ்துவுக்கூடாக வெளிப்படும் தேவ வல்லமை நோய்களை குணப்படுத்துகிறது. இன்றைய நாட்களில் கூட அவரது தேவ வல்லமையால் நோய்களை குணமாக்குகிறார். ***அவர் மாறாதவராய் இன்றும் கிரியை செய்வதை நாம் காண்கிறோம்.*** விசுவாசக் குறைவின் நிமித்தமாக வியாதிகள் எம்மை தாக்கும் போது நாம் பயந்து கலக்கமடைந்து குழப்பமடையாது இயேசுவை நோக்கி விண்ணப்பித்து எம்மை சுகமாக்கும்படி **விசுவாசத்தோடு ஜெபித்தோமானால்,** அவா எமக்கு தமது தெய்வீக சுகத்தை அருளுவார். ***நீங்கள் அதைரியப்படாதிருங்கள்!*** உங்கள் நோய்களை குறித்து மனிதரிகளிடம் ஆலோசனைகளை கேட்காதீர்கள். விசுவாசத்தோடும், ஜெபத்தோடும் இயேசுகிறிஸ்துவை நம்பி அவரிடம் உங்கள் நோய்களை ஒப்புக் கொடுத்து குணமாக்கும்படியாக ஜெபித்து அற்புத விடுதலையைப் பெற்று மகிழ்ந்திருங்கள். ***இன்றைய நாள் விடுதலையின் நாள்!***

**ஜெபம்**

படைத்த மனிதர்களை நேசிக்கும் பரலோக தேவனே! எங்களினிமித்தம் இப் பூமிக்கு அவதரித்து நோய்களை சுகமாக்கும் அற்புத அதிசய கிரியைகளுக்காக நன்றி! என்னையும் உங்கள் அற்புத கிரியைகளினால் சுகமாக்கும்படியாக இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். –ஆமென்–

**வேத வாக்குத்தத்தம்**

"...நானே உன் பரிகாரியாகிய கர்த்தர் என்றார்."
(யாத்திராகமம் 15:26)

ஜீவ மன்னா
ஒக்டோபர் **17**
வெள்ளி

**தேவன் உங்கள் வாழ்வில் அதிசயங்களை காணச்செய்வார் !**

இன்றைய வேதவாசிப்பு
அப்போஸ்: அதி: 09 – 10

**"அதற்கு மரியாள் தேவதூதனை நோக்கி: இது எப்படியாகும்? புருஷனை அறியேனே என்றாள்."** (பரி.லூக்கா 1:34)

தேவ அன்பிற்கும் கிருபைக்கும் பாத்திரமான தேவ பிள்ளைகளே! ***ஆரோக்கியம் சுகம் ஆசீர்வாதம் அளிக்கும் ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் நல்ல நாளாகிய இன்றும் உங்களை வாழ்த்துகின்றேன்.*** கண்களுக்கு தெரியாது அருபியாக காணப்படும் ***கர்த்தரை விசுவாசித்து வாழும் நீங்கள் பாக்கியவான்கள்.*** என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான் என்றும். காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள் என்றும் வேதாகமத்தில் கூறுகின்றது.

அன்பார்ந்தவர்களே! அன்று மரியாளை நோக்கி தேவ செய்தி கொண்டு வந்த ***"தேவ தூதன் இதோ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய் அவருக்கு இயேசு என்று பெயரிடுவாயாக"*** என்று கூறினார். திருமணமாகாத கன்னியாகிய மரியாள் இது ஒரு போதும் நடவாது என அறிந்து இதைக் கேட்டு அதிசயத்தவளாய் தூதனை நோக்கி "இது எப்படியாகும் புருஷனை அறியேனே" என்றான். அதற்கு பதிலாக தேவ தூதன் பரிசுத்த ஆவி மேல் வரும் உன்னதமானவருடைய பலம் உன் மேல் நிழலிடும் ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் எனப்படும்" என்றான். ***தேவனுடைய வார்த்தைகள் ஒன்று கூடசெயல்படாமல் போனதில்லை*** என வேத வார்த்தைகள். கூறுகின்றன. அதன்படி ***உலகில் எங்கும் யாரிலும் நடக்காத அற்புதம் மரியாளுடைய வாழ்க்கையில் நிறைவேறியது.***

தேவ பிள்ளைகளே! எமது ***பரலோக தேவனால் செய்ய முடியாத காரியம் ஒன்றுமேயில்லை.*** கர்த்தர் செய்ய நினைக்கும் காரியங்கள் ஒன்றும் தடைபடாது. "அவர் சொல்ல ஆகும் அவர் கட்டளையிட நிற்கும்." அதே போல் இன்று உங்கள் வாழ்விலேயும் பெரிய செயல்களை நடத்துவார். அவர் முதலாவதாக உங்கள் விசுவாசம் எத்தகையது என்பதை ***ஆராய்ந்து பார்க்கிறார்.*** விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்ற வார்த்தையின்படி ***உங்கள் விசுவாசம் தேவனால் சோதிக்கப்படும்.*** மற்றவர்களுடைய ஜெபத்தை ஜெயிக்கும்படி உங்கள் ஜெபம் இராதபடி ***உங்களுக்காக மாத்திரம் ஜெபம் செய்யுங்கள். நீங்களே ஆச்சரியப்படத்தக்கதாய் தேவன் பதில் தருவார். இன்றைய நாள் மகிழ்ச்சியின் நாள்!***

**ஜெபம்**

என் தேவனே! புதுமைகள் செய்பவரே நீங்கள் என் வாழ்க்கையில் அதிசயமான காரியங்களை செய்து என்னை ஆச்சரியமடையச் செய்பவரே இன்றும் எனக்கு அதிசயங்களை காணத்தக்கதாக காரியங்கள் நிறைவேற கட்டளையிடுமாறு இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"என்னை நோக்கிக் கூப்பிடு, அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து, நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன்." (எரேமியா 33:3)

ஜீவ மன்னா

ஒக்டோபர் 18
சனி

# தகப்பன் தன் மகனை சிட்சிப்பதுபோல சிட்சிக்கும் கர்த்தர் !

இன்றைய வேதவாசிப்பு
அப்போஸ்: அதி: 11 – 12

**"...உன்னையோ நான் நிர்மூலமாக்காமலும், முற்றிலும் தண்டியாமல் விடாமலும், மட்டாய்த் தண்டிப்பேன்."** (எரேமியா 30:11)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! ஜீவனுள்ள தேவன் இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தினால் **இன்றைய தினத்திலே பரலோக ஆசீர்வாதங்களையும் பூலோக ஆசீர்வாதங்களையும் பெற்று மகிழ்ந்திருக்குமாறு வாழ்த்துகின்றேன்.** இன்றும் இப் புதிய இளங் காலைப் பொழுதினிலே ஜெபத்தை ஏறெடுத்து இன்றைய நாள் இதழின் ஆசீர்வாதம் நிறைந்த வார்த்தையை வாசிக்கும்படியாய் உங்கள் கரங்களில் எடுத்து தலையங்கத்தை பார்த்தவுடன் உங்கள் இருதயம் திகைப்பில் ஆழ்ந்திருக்கும். **உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக!**

தேவ பிள்ளைகளே! ஆத்மீக பிள்ளைகளாகிய உங்களது வாழ்விலும் உலக வாழ் ஜனங்களைப் போல துன்பங்கள், கஷ்டங்கள், பிரச்சினைகள் உபத்திரவங்கள் என்பவற்றை சந்திக்க நேரிடலாம். ஏனெனில் தேவன் உங்களை **தங்கள் சுவீகாரப் பிள்ளையாக தெரிந்து கொண்டு உங்களைக் குறித்து உயர்வான திட்டங்களை வைத்துள்ளார்.** அவைகள் உங்கள் வாழ்வில் நிறைவேற முடியாதபடி உங்கள் எதிராளியாகிய சத்துருவானவன் அநேக தடைகளை உண்டுபண்ணும்படியாக செயல்படுவான். ஆதனால் நாள்தோறும் **நீங்கள் அநேக மாறுபாடான பிரச்சினைகளை அனுபவிக்க நேரிடும்.** இவைகளை நீங்கள் மேற்கொள்ளுமுகமாக உங்கள் வாழ்வில் காணப்படும் **தவறான வார்த்தைகள், காரியங்கள், தன்மார்க்கமான விடயங்கள் யாவையும் விட்டு விடுங்கள்.** கர்த்தர் உங்களைத் தெரிந்துக் கொண்டது உலக மனிதர்கள் மத்தியில் உங்களை உயர்த்தி உங்கள் நற்பண்புகள் மற்றவர்கள் முன் வெளிப்படவும், உங்கள் ஆத்மீக வாழ்வைக் குறித்து தெரிந்துக் கொண்டு நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய பிள்ளையென ஏற்றுக் கொண்டு உலக மனிதர்கள் மத்தியில் உங்களை **கௌரவப்படுத்தும்படியாகவே அவர் பிரியமாயிருக்கிறார்.** இதை அறிந்து கொண்ட சாத்தான் உங்களில் காணப்படும் சிறுசிறு குறைபாடுகளை பெரிது படுத்தி **உங்களை பாவத்தில் விழச் செய்ய முயற்சிப்பான்.**

தேவ பிள்ளைகளே! இப்படியான சந்தர்ப்பங்களில் ஒரு சிறு பாவம் உங்களில் காணப்பட்டால் **சாத்தான் அதையே உங்களுக்கு சுட்டிக்காட்டி உங்களுக்கு ஆத்மீக பிள்ளையாக வாழ முடியாதென உங்கள் ஆத்மீக வாழ்வை சோர்வடையச் செய்து பின்மாற்றத்திற்குள்ளாக்கப்படுத்த முயற்சிப்பான்.** பாவம் செய்வதற்கு தூண்டுவான். அவன் வலையில் அகப்படாதபடி நீங்கள் உங்கள் பாவங்களை நினைத்துப் பார்த்து அறிக்கைப் பண்ணி **பட்சாதாபப்பட்டு ஜெபித்து மனந்திரும்பி தேவனின் கிருபையை பெற்றுக் கொள்ளுங்கள்.** இல்லாவிடின் எம் இன்றைய செய்தியின் முதல் வசனமாகிய **எரேமியா 30:11**இல் "உன்னையே நான் நிர்மூலமாக்காமலும் முற்றிலும் தண்டியாமல் விடாமலும் மாட்டாய்." தண்டிப்பேன் என்பதின்படி கர்த்தருடைய சிட்சை உங்களை நோக்கி இறங்கி விடும் தண்டனையாக செயல்பட்டு மறுபடியும் உங்களை புடமிட்டு மாறச் செய்யும். **மனந்திரும்பி ஆசீர்வாதமடையுங்கள். ஜெயம் பெறும் நாள்!**

**ஜெபம்**

அன்பார்ந்த என் தேவனே! உங்கள் தண்டனை என்னில் வருவது எனது வாழ்வை சீர்படுத்தும்படியாகவே இது தண்டனையல்ல தேவன் என்னை சிட்சிக்கிறார் என்பதை உணர்ந்து மனம் வருந்தி மன்னிப்பைப் பெற்று மறுபடியும் உங்களண்டையில் கிட்டிச் சேரவும், எங்கள் உயர்ந்த திட்டங்களை நிறைவேற்றி ஆசீர்வதிக்க ஜெபிக்கிறேன் ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"தகப்பன் தான் நேசிக்கிற புத்திரனைச் சிட்சிக்கிறதுபோல, கர்த்தரும் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனைச்சிட்சிக்கிறார்." (நீதிமொழிகள் 3:12)

ஜீவ மன்னா

ஒக்டோபர் **19**

ஞாயிறு

# உங்கள் குற்றமற்ற பரிசுத்த வாழ்வை விரும்பும் தேவன்!

இன்றைய வேதவாசிப்பு

அப்போஸ்: அதி: 13 – 14

**"...எதுவரைக்கும் சுத்தாங்கம் அடையமாட்டாதிருப்பார்கள்?"** (ஓசியா 8:5)

அன்பான தேவ பிள்ளைகளே! கர்த்தருடைய வல்லமையை நாடி அவர் சமுகத்தை நித்தமும் தேடும் உங்களை அவர் தினந்தோறும் ஆசீர்வாதமாக வைத்திருக்கிறார். **இன்றும் இயேசுவின் வல்லமையான நாமத்தால் மகிழ்ச்சியின் நாளைப் பெறுமாறு வாழ்த்துகின்றேன்.** பிள்ளைகளே உங்கள் பரலோக பிதாவானவர் மகா பரிசுத்தர். ஆகையால் இந்த இலங்கை வாழ் ஜனங்கள் மத்தியில் உங்களைத் தெரிந்துக் கொண்டு **தமது பிள்ளையாக மாற்றி நீங்களும் பரிசுத்தமுள்ள நீதிமானாக விளங்குவதையே அவர் விரும்புகிறார்.** இதை வேத வசனம் **லேவியராகமம் 20:26**இல் "கர்த்தராகிய நான் பரிசுத்தராயிருக்கிறபடியினாலே நீங்களும் எனக்கேற்ற பரிசுத்தவான்களாயிருப்பீர்களாக **நீங்கள் என்னுடையவர்களாயிருக்கும்படிக்கு உங்களை மற்ற ஜனங்கள் விட்டுப் பிரித்தெடுத்தேன் என்று கர்த்தர் கூறுகின்றார்.**

தேவ பிள்ளைகளே! இன்று தேவ செய்தியின் பிரதான தேவ வார்த்தை கூறுகிறது. "எதுவரைக்கும் சுத்தாங்கம் அடையமாட்டாதிருப்பார்கள்." என்று இதை விளக்கமாக பார்க்கும் போது நாம் பாவமின்றி குற்றமற்றவர்களாய் வாழ்வதையே விரும்புகிறார் என்று அறியக் கூடியதாக இருக்கிறது. **உங்கள் வாழ்வினை குறித்து ஆராய்ந்து அறியுங்கள்.** உங்கள் **பரலோக தேவனுக்கு முன்பாக குற்றமற்றவராக பரிசுத்தமாக ஜீவிக்கின்றீர்களா?** என்பதை **உங்களால் உங்கள் உள்ளத்தை நிதானித்தறிய முடிகிறதா?** உங்கள் மனசாட்சியைக் கொண்டு உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். **1 யோவான் 3:21**இல் சத்திய வசனம் எம் மனசாட்சியைக் குறித்து இப்படி கூறுகிறது "நம்முடைய இருதயம் நம்மைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருந்தால் நாம் தேவனிடத்தில் தைரியங்கொண்டிருந்து என்று." ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் எமது மனசாட்சி ஒரு செயலைக் குறித்து அது தவறு என்று கூறுமானால் **எமது செய்கைகளில் தவறு உண்டென்று உணர்த்தினால் அதற்கு நாங்கள் செவி கொடுக்க வேண்டும்.** எம்மால் செய்யப்பட்ட சகல பாவக்காரியங்களையும் தேவனுக்கு முன்பாக அறிக்கையிட்டு மனஸ்தாபப்பட்டு பொருத்தனையோடு மன்னிப்பு பெற்றுக் கொள்வது அவசியமாகும்.

தேவ பிள்ளைகளே! **நீங்கள் பயப்படாதிருங்கள் உங்களைக் குறித்து கவலைப்படுவதை தவிர்த்து விடுங்கள். உங்கள் சிருஷ்டி கர்த்தாவை குறித்தும், பொருத்தனைகளைக் குறித்தும் விசுவாசியுங்கள்.** உங்கள் உள்ளம், சரீரம், அவயவங்கள் எல்லாம் எப்போதும் பரிசுத்தத்தை காத்துக் கொள்ளட்டும். ஆண்டவர் விரும்பாத அனுமதிக்காத எந்தவொரு செயலும் உங்கள் **வாழ்விலே செயல்பட இடங்கொடுக்காதீர்கள்.** தேவ விருப்பத்தை செயல்படுத்தி உத்தம **இருதயத்தோடு ஆசீர்வாதம் பெற்று மகிழ்ந்திருங்கள். மகிழ்ச்சியின் நாள்!**

ஜெபம்

என் பரலோக பிதாவே! பரிசுத்தமானவரே! உங்கள் பிள்ளைகளாகிய நாம் பரிசுத்தவான்களாகவும், உத்தமர்களாகவும் ஜீவிக்க வேண்டும் என்று விருப்பமுடையவரே! நான் பெலவீனன் என்னையும் பெலப்படுத்தி பரிசுத்த பாதையில் உத்தமனாக வாழ வழிகாட்டியருளும்.

இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"மனுஷருடைய வழிகள் கர்த்தரின் கண்களுக்கு முன்பாக இருக்கிறது; அவனுடைய வழிகளெல்லாவற்றையும் அவர் சீர்தூக்கிப்பார்க்கிறார்." (நீதிமொழிகள் 5:21)

ஜீவ மன்னா

ஒக்டோபர் 20 திங்கள்

## சிலுவையின் பாடுகளால் பாவிகளை மன்னிக்கும் இயேசுகிறிஸ்து !

இன்றைய வேதவாசிப்பு

அப்போஸ்: அதி: 15 – 16

**"இயேசு அவனை நோக்கி: இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்."** (பரி.லூக்கா 23:43)

பிரியமான தேவ பிள்ளகைளே! ஜீவிக்கின்ற தேவனாகிய **இயேசுகிறிஸ்துவின் பரிசுத்த நாமத்தினால் உங்கள் உள்ளமும், இல்லமும் இன்றைய தினத்தில் மகிழ்ச்சியில் நிறைந்திருக்குமாறு பிரார்த்திக்கின்றேன்.** உங்களுக்கு உடனடியாக உதவி செய்யக் கூடிய ஜீவனுள்ள தேவன் இன்றும் உங்களோடிருக்கிறார். ஆகையால் **உங்கள் உள்ளம் என்றும் கலங்காதிருப்பதாக!** கர்த்தர் எம்மை அதிகதிகமாய் நேசிக்கிறவரானபடியால் அவர் எம் தராதரத்தை குறித்து பாராதபடி **அவருடைய கிருபையை எமக்களிப்பார்.**

தேவ பிள்ளைகளே! ஆண்டவர் **இயேசுகிறிஸ்து பாவிகளை எவ்வளவாய் நேசித்தார்.** அவர்கள் இரட்சிப்படைய வேண்டுமென எவ்வளவு எதிர்பார்ப்போடு இருக்கிறார்? என்பதை அவரது சிலுவை மரணத்தின் கோரத்தை தியானித்து அறியலாம். அவரது சரீரத்தில் ஏற்பட்ட 39 காயங்களால் ஏற்பட்ட **வேதனை, சிரசில் சூட்டப்பட்ட முள்முடியின் தாங்க முடியாத வேதனை,** கைகளிலும், கால்களிலும் ஆணிகள் அடிக்கப்பட்டு தாங்க முடியாத வேதைனையில் சிலுவையில் அறையப்பட்ட போதிலும் தமக்கு பக்கத்தில் சிலுவையில் அறையப்பட்ட கள்ளவர்களில் ஒருவனுக்கு **அவரது வாயிலிருந்து சொல்லப்பட்ட ஆறுதலான வார்த்தைகளே இன்றைய செய்தியின் தலைப்பு வசனமாகும்.** "இன்றைக்கு நீ என்னுடனே கூட பாராதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்" என்பதாகும். அந்தக் கள்ளன் மனம்மாறி ஆண்டவரே நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும் போது அடியேனை நினைத்தருளும் என்று கேட்டதற்கு மறுமொழியாக இயேசு மேலே தரப்பபட்ட வார்த்தைகளை கூறினார். அத் துக்கமான வேதனை வேளையிலும் அவன் இரட்சிப்படைவதையே தேவன் விரும்பி அவனுக்கு **இரட்சிப்பின் கிருபையை அருளினார்.**

தேவ பிள்ளைகளே! ஆண்டவர் அன்று அனுபவித்த அந்த வேதனை போன்ற எமக்கும் ஒரு சரீர வேதனை ஏற்பட்டு நாம் வேதனையுடன் இருக்கும் வேளையில் இப்படியாக பரலோக இராஜ்யத்தில் பிரவேசிக்கும்படியாக ஒரு மனிதன் கேட்டால் எமது பதில் என்னவாய் இருந்திருக்கும்? **என எண்ணிப் பாருங்கள்.** ஆனால் **மனித உருவில் இருந்த தேவ குமாரன் அவ்வேளையிலும் தன்னிடம் வேண்டுகோளிலிருந்த மனிதனிடம் இரக்கத்துடன் பதில் அளித்தார்.** தேவன் மனிதனாக உலகிற்கு வந்தது பாவிகளை மீட்கும்படியாகவே. அதனால் தான் மரண வேதனையில் இருந்த போதும் தன்னிடம் கிருபையை எதிர்பார்த்த அந்தக் கள்வனுக்கு தயை கூர்ந்தார். அதே போல் இன்றும் தம்மிடம் கிருபையை எதிர் நோக்கும் **பாவிகள் நிமித்தம் அவர் மனதுருக்கம் நிறைந்தவராய் இருக்கிறார். வெற்றித் தரும் நாள்!**

**ஜெபம்**

அன்பான தேவனே! நீங்கள் மனுபுத்திரனாக உலகிற்கு வருகை தந்து உங்கள் அளவில்லா கிருபையின் நிமித்தமே! இன்றும் உங்கள் கிருபை மாறாததாக இருக்கிறது. உங்கள் கிருபை என்னை நோக்கி கடந்து வரும்படி இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"...நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன் என்றார்." (பரி:மத்தேயு 9:13 )

ஜீவ மன்னா

ஒக்டோபர் 21 செவ்வாய்

# உங்கள் துயரத்தில் துணை புரியும் இயேசுக்கிறிஸ்து !

இன்றைய வேதவாசிப்பு

அப்போஸ்: அதி: 17 – 18

"தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக்காலத்தில் அநுகூலமான துணையுமானவர்." (சங்கீதம் 46:1)

அன்பான தேவ பிள்ளைகளே! நித்திய ஜீவனையும், இரட்சிப்பின் சந்தோஷத்தையும் அருளி உங்களை ஆசீர்வதித்து **ஜீவனுள்ள தேவன் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் இன்றைய நாளிலும் உங்களுக்கு மகிழ்ச்சிக்குரிய நாளாகும்படியாக வாழ்த்துகின்றேன்.** தேவ பிள்ளைகளே! "என் நாமத்தினால் நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்" என்று ஆண்டவர் இயேசு எமக்கு வாக்களித்துள்ளார். இந்த வாக்குறுதி இன்றும் நிறைவேறிக் கொண்டிருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் நாமத்தைச் சொல்லி எம் ஜெபத்தில் கேட்கும் போது அவை எமக்கு நன்மைகளைக் கொண்டு வருவதாக இருக்குமானால் **ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவே அதை எமக்கு பெற்று தருகிறார்.**

தேவனுடையவர்களே! அவருடைய நாமம் வல்லமை பொருந்தியதாக உள்ளமையால், அதை **எம் வாயில் அறிக்கையிட்டு ஜெபிக்கும் போது எம் மத்தியில் அதிசயமான, அற்புதமான காரியங்கள் நடைபெறும்.** ஆயிரம், பதினாயிரம் மனிதர்கள் உங்களோடிருந்த போதிலும், அவர்கள் ஒருவராலும் செய்ய முடியாத காரியத்தை இயேசுகிறிஸ்து உங்களுக்குச் செய்வார். அவருடைய **வாயின் ஒரு வார்த்தைக் கூடாக உங்கள் வாழ்வில் மகா பெரிய மாறுதல் உண்டாகும்.** இன்றைய தியான வசனத்தில் எழுதியுள்ளது போல **அவரே எமது அடைக்கலம் பெலனுமானவர், ஆபத்து காலத்திலே அநுகூலமான துணையுமானவர்.** அவர் மகத்துவமான ஆண்டவராயினும் மனிதர்களின் பாவம் பெருகியபடியால், அவர்களை மீட்கும்படியாக தேவ குமாரனாக இப் பூமியில் அவதரித்து இயேசுகிறிஸ்து என்னும் நாமத்தால் வெளிப்படுத்தப்பட்டார். இன்றும் பிதா, குமாரன், பரிசுத்தாவியானவராக கிரியை செய்துக் கொண்டிருக்கிறார்.

தேவ பிள்ளைகளே! இயேசுகிறிஸ்துவோடு ஜீவிக்கும் நீங்கள் அதிர்ஷ்டமானவர்கள். **அவர் மூலமாக பரலோக பிதா உங்களுக்கு சமீபமாயிருக்கிறார். பெத்தானியா என்ற கிராமத்தில் மார்த்தாள், மரியாள்** என்ற இரண்டு சகோதரிகளும், தமது ஒரே சகோதரனான லாசரு நோய் வாய்ப்பட்டு மரித்தபோது துயரத்தை தாங்க முடியாமல் அழுது **புலம்புவதைக் கண்டபொழுது இயேசு கண்ணீர் விட்டு அழுதார் என்றும். லாசருவை மரணத்திலிருந்து எழுப்பினார் என்றும்.** அவர்களுடைய துக்கம் நீக்கப்பட்டது எனவும் வேத வசனங்களில் எழுதப்பட்டிருக்கிறது. அதே போல் இன்றும் கர்த்தர் இயேசுகிறிஸ்துவுக்கூடாக உங்கள் அருகிலிருந்து துக்கங்களை நீக்கி துயரங்களை மாற்றி அருள் புரிவார். **இன்று ஆசீர்வாதத்தின் நாள்!**

**ஜெபம்**

என் தேவனே! என் துன்ப துயர வேளைகளில் என்னோடிருக்கும் கிருபைக்காய் நன்றி! இன்றைய தினத்திலும் என்னை சூழ்ந்திருக்கும் எல்லா துன்ப துயரங்களும் அகன்று போகும்படி எனக்கு அருள் புரியுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன் ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"ஒருவனை அவன் தாய் தேற்றுவதுபோல் நான் உங்களைத் தேற்றுவேன்; நீங்கள் எருசலேமிலே தேற்றப்படுவீர்கள்." (ஏசாயா 66:13)

ஜீவ மன்னா

ஒக்டோபர் 22 புதன்

**உங்கள் நற்கிரியைகளுக்கு நன்மையான ஆசீர்வாதங்கள் அருளுவார் !**

இன்றைய வேதவாசிப்பு

அப்போஸ்: அதி: 19 – 20

**"...செம்மையாய் நடக்கிறவனுக்கு என் வார்த்தைகள் நன்மை செய்யாதோ?"** (மீகா 2:7)

அன்பார்ந்த தேவ ஜனங்களே! ஜீவனுள்ள இயேசுகிறிஸ்துவின் வல்லமையுள்ள நாமத்தினால் ***இப் புதிய நாளில் இனிதான காலை வேளையில் புதிய கிருபை உங்களை சூழ்ந்துக் கொள்ளும்படி வாழ்த்துகின்றேன்.*** உங்கள் முக அலங்காரத்தை பார்த்தோ அல்லது உங்கள் சரீரத்தின் சுபாவத்தை குறித்தோ உங்களை தெரிந்துக் கொள்ளவில்லை. ***உங்கள் இருதயத்தை நோக்கிப் பார்த்தே உங்களை தமது சொந்தப் பிள்ளையாக தெரிந்துக் கொண்டார்.*** சகலவற்றையும் உங்கள் நன்மைக்கேதுவாகவே செயல் நடத்துகிற தேவனின் உன்னதமான அழைப்பினை பெற்றுக் கொண்ட ***நீங்கள் பாக்கியவான்கள்.***

தேவ பிள்ளைகளே! இன்றைய எமது பிரதான செய்தி ***மீகா 2:7***இல் கூறப்பட்டுள்ளது. செம்மையாய் நடக்கிறவனுக்கு என் வார்த்தைகள் நன்மை செய்யாதோ? என்று. இதின் விஷேசித்த வேண்டுகோள் நீங்கள் செய்யும் காரியம் யாவையும் நன்மையானதாக, நல்ல காரியங்களாக இருக்குமாயின் ***தேவனுடைய நன்மைகள் யாவும் உங்களை வந்தடையும்.*** ஆகையால் உங்கள் செயல்கள் கிரியைகளை சீர்ப்படுத்திக் கொள்ளுங்கள். நீங்கள் அவருடைய பரிசுத்தமான பிள்ளையாக இருக்கிறபடியால் ***நீங்களே அநீதியான காரியங்களை செய்யும் பட்சத்தில் அவைகளுக்குண்டான தண்டனையை பெற வேண்டியதாயிருக்கும்.*** அதே போல் துன்மார்க்கனாக காணப்பட்டு அதன் பின்பு மனந்திரும்பி செம்மையான வழியில் நடந்து பரிசுத்தவானாக ஜீவிப்பீர்களேயானால் ***உங்கள் நற்கிரியைகளுக்குண்டான பலனை பெற்றுக் கொள்வீர்கள்.*** ஆனால் அநேகமாக தேவனைக் குறித்து குறை சொல்பவர்களையே காணக் கூடியதாக உள்ளது. அவனவனுடைய கிரியைகளுக்கு ஏற்ற பலனையே ஒவ்வொருவரும் பெற்றுக் கொள்கிறார்கள். இதை ஏற்றுக் கொள்ளாது, புரிந்துக் கொள்ளாது மற்றவர்கள் ***மீது அப்பழியை போட முற்படுகிறார்கள்.***

தேவ பிள்ளைகளே! கர்த்தர் நீதியுள்ளவரும் நல்லவருமாக இருக்கிறபடியால் ***அவர் ஒரு போதும் மனிதனை வீணாய் தண்டித்து வேதனைப்படுத்தி, துன்பப்படுத்தி தண்டனைக்குள்ளாக்குபவரல்ல.*** எமது தவறுகளின் நிமித்தமும் ***உங்கள் அநீதியான செயல்களினால் உங்களை கண்டித்து உணர்த்தி தண்டனைக்குட்படுத்தி உங்களை திருத்த முற்படுகிறார்.*** வேத வசனம் ***புலம்பல் 3:39***இல் "உயிருள்ள மனிதன் முறையிடுவானேன் அவன் தன் பாவத்திற்கு வரும் தண்டனையைக் குறித்து முறையிடுகிறதென்ன?" என்று. ஆகையால் நீங்கள் இன்று வேதனையோடும், துன்பத்தோடும், இருப்பீர்களானால் உங்களைச் சோதித்தறிந்து காரணத்தை உணர்ந்து ***பிழைகளை விட்டு மனந்திரும்பி இயேசுவண்டை வாருங்கள். மீகா 2:7***இன் வசனத்தின்படி உங்கள் செம்மையான நடத்தையைக் கண்டு தம் வார்த்தைகளால் உங்களை ஆசீர்வாதமாக மாற்றுவார். ***ஆசீர்வாதமான நாள்!***

ஜெபம்

ஆண்டவரே உங்கள் வாயின் வார்த்தைகள் என் வாழ்க்கைக்கு நன்மைகளை கொண்டு வரும் என்பதை இன்று நான் அறிந்தேன். உங்கள் நன்மைகளின் ஈவை பெறும்படியாக எனக்கு தயை கூறுங்கள் இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"கர்த்தராகிய நானே ஒவ்வொருவனுக்கும், அவனவன் வழிகளுக்கும் செய்கைகளின் பலன்களுக்கும் தக்கதைக் கொடுக்கும்படிக்கு, இருதயத்தை ஆராய்கிறவரும் உள்ளிந்திரியங்களைச் சோதித்தறிகிறவருமாயிருக்கிறேன்." (எரேமியா 17:10)

ஜீவ மன்னா
ஒக்டோபர் 23
வியாழன்

## மாறாத அன்பினால் தேவனைப் பிரியப்படுத்துங்கள் !

இன்றைய வேதவாசிப்பு
அப்போஸ்: அதி: 21 – 22

**"எப்பிராயீமே, உனக்கு என்ன செய்வேன்? யூதாவே, உனக்கு என்ன செய்வேன்? உங்கள் பக்தி காலையில் காணும் மேகத்தைப்போலவும், விடியற்காலையில் தோன்றும் பனியைப்போலவும் ஒழிந்து போகிறது."**
(ஓசியா 6:4)

அன்பும், கிருபையும், காருண்யமும் மிக்க ஜீவனுள்ளவரும் எம்மை உண்டாக்கினவருமான **ஜீவனுள்ள இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தினால் இப் புதிய நாளில் தேவ பிள்ளைகளான உங்கள் அனைவருக்கும் ஆறுதலின் நாளாக விளங்கும்படியாக பிரார்த்திக்கின்றேன்.** தேவனுடைய அன்பு சதாகாலங்களில் உள்ளது. அது ஒரு நாளும் மாறாததாயிருக்கிறது. **எரேமியா 31:3**இல் குறிப்பிடப்பட்டுள்ளது அநாதி சிநேகத்தால் உன்னைச் சிநேகித்தேன் ஆதலால் காருண்யத்தால் உன்னை இழுத்துக் கொள்கிறேன் என்பதாக. இப்படியான தேவ அன்பிற்கு பாத்திரமான நீங்கள் உண்மையிலேயே பேறுபெற்றவர்களாயிருக்கிறீர்கள்.

அன்பார்ந்தவர்களே! முப்பது (30) வருடங்களைக் கடந்து வந்த என் ஆத்மீக வாழ்க்கைப் பயணத்தில் **அநேக விரோதங்கள், பிரச்சினைகள், சவால்கள் துன்பங்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்பட்ட வேளையில் தோல்விகளையும் ஏற்றுக் கொள்ள வேண்டியிருந்தது.** அவைகள் என் ஆத்மீக ஜீவியத்திலும், என் ஊழியத்தின் பாதையிலும் தடைகளையோ, பின்மாற்றங்களோ ஏற்படுத்தி விழுந்து போகும்படியாக செய்யவில்லை. என் ஆத்மீக வழிப் பயணத்தை புதுமெருகிட்டு புதிய காரியங்களோடு முன்னோக்கிச் செல்ல வழியமைத்துக் கொடுத்து புதுபெலன் என்னை வந்தடைந்து **என் சோதனை வேளைகளில் என் இயேசு என்னோடிருந்து என்னை ஆறுதல்படுத்தினார்.** பாதுகாப்போடு என்னை முன் நடத்தினார். அதே போல் இன்று உங்களையும் வழிநடத்துவார். என்பதை நான் அறிவேன். உங்கள் தேவனை எவ்வளவாய் நேசிக்க வேண்டும் என்பதை சிந்தியுங்கள். **ஓசியா 6:4**இல் "உங்கள் பக்தி காலையில் காணும் மேகத்தைப் போலவும் விடியற் காலையில் தோன்றும் பனியைப் போலவும் ஒழிந்து போகிறது" என்று கூறியிருப்பது போல எம் ஆத்மீக ஜீவியத்தின் பக்தி குறைவுபடுதலைக் குறிக்கிறது.

தேவ பிள்ளைகளே! நீங்கள் சௌகரியமாயிருப்பினும், அசௌகரியமாயிருப்பினும் தேவ அன்பில் மாறுபடாதவராய் இருங்கள். **தேவன் மாறாதவராய் இருப்பதால் நீங்களும் மாறதவராய் இருங்கள்.** "உங்கள் முழு ஆத்துமாவோடும், முழு பெலத்தோடும், முழு புத்தியோடும் முழு இருதயத்தோடும் தன்னை நேசிக்க வேண்டும் என" எம் ஆண்டவர் விரும்பி அதை எம்மிடமிருந்து எதிர்பார்க்கிறார். உங்கள் இருதயம் கலக்கமடையாதபடி, பயமடையாதபடி முதிர் வயது வரையிலும், நரை வயது வரையிலும் **தேவன் உங்களோடிருப்பார். இன்று நன்மை நிறைந்த நன்நாள்!**

ஜெபம்

என் அன்பின் இயேசுவே! சதாகாலங்களிலும் அன்பாய் இருக்கிறவரே
உங்கள் அன்பை அறியாது பின்பு குறைவுப்பட்ட நிலைமையில் இருக்கும்
என்னை மன்னித்து என் இருதயத்தில் உங்கள் மீது கொண்டுள்ள அன்பு
பெருகும்படியான கிருபையை கட்டளையிடுமாறு
இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"பூமியின் எல்லா வம்சங்களுக்குள்ளும் உங்களை மாத்திரம் அறிந்து கொண்டேன்; ஆகையால் உங்களுடைய எல்லா அக்கிரமங்களினிமித்தமும் உங்களைத் தண்டிப்பேன்." (ஆமொஸ் 3:2)

ஜீவ மன்னா

ஒக்டோபர் 24 வெள்ளி

# இழந்த ஆசீர்வாதங்களை மீண்டுமாக அளிக்கும் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு

அப்போஸ்: அதி: 23 – 24

**"நான் உங்களிடத்தில் அனுப்பின என் பெரிய சேனையாகிய வெட்டுக்கிளிகளும், பச்சைக்கிளிகளும், முசுக்கட்டைப் பூச்சிகளும், பச்சைப் புழுக்களும் பட்சித்த வருஷங்களின் விளைவை உங்களுக்குத் திரும்ப அளிப்பேன்."** (யோவேல் 2:25)

அன்பார்ந்த தேவனுடைய பிள்ளைகளே! ஜீவிக்கின்ற தேவன் ***இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் ஆத்மீக ஆசீர்வாதங்களினாலும் லௌகீக ஆசீர்வாதங்களினாலும் நிரம்பி வழியும் மகிழ்ச்சிக்குரிய நாளாக திகழும்படி வாழ்த்துகிறேன்.*** அருபியாய் கிரியை செய்யும் சர்வ வல்லமையுள்ள, மகத்துவமுள்ள, பரலோக தேவனை எங்களால் காண முடியாத போதும் அவரது மகிமையின் செயல்களைக் காணவும், கேட்கவும் அவரது வார்த்தைகளுக்கூடாய் ***அவரைக் குறித்து அநேக காரியங்களை தெரிந்துக் கொள்ள சலாக்கியத்தை பெற்றுக் கொண்ட நாம் அதிர்ஷ்டசாலிகளே!*** இந்த அதிர்ஷ்டம் எமக்குக் கிடைத்தது அவர் எம்மை அதிகமாக நேசிக்கிறபடியினாலேயாகும்.

அன்பார்ந்தவர்களே! எமது பரலோக தேவனைக் குறித்து அறிந்தும் அவருடைய வல்லமையின் அற்புதங்களை கண்டும் அவரை தெய்வம் என்று ஏற்றுக் கொள்ளாத அநேகர் இவ்வுலகில் இருக்கிறார்கள். ஆனால் அவரது அநாதி சிநேகத்தால் எம்மை அவரண்டை இழுத்துக் கொண்டபடியால் எம்மால் அவரது அன்பின் கயிறுகளால் கட்டியிருக்கிறபடியால் எம்மால் அவரை வேண்டாம் என்று தள்ளி வைக்க முடியாது. ***நீங்கள் அவரை முழு இருதயத்துடன் நேசிக்க வேண்டும்.*** அப்போது ஆண்டவர் உங்களுக்கு சமீபமாயிருந்து ***சகலவற்றிலும் ஆசீர்வாதமாக வழி நடத்துவார்.*** எமது சோர்வு அசதிகளால் அவரை தேடாதிருந்த நாட்களின் நிமித்தமாக பல வருடங்களாக பின் தங்கிப் போன எம் ஆசீர்வாதங்கள் மறுபடியுமாக எல்லாத் தடைகளும் நீங்கி எம்மை வந்தடையச் செய்வதாக இன்று கர்த்தர் அறிவிக்கிறார்.

தேவ பிள்ளைகளே! விஷேசமாக இவ்வசனம் வலியுறுத்துகிறது ஆண்டவருடைய அனுமதியின் பேரிலேயே இத்தடை ஏற்பட்டதாக எமது ஆசீர்வாதம் எம்மை வந்தடைய முடியாமல் போனது அசதியின் காரணமாக அல்லவா? ***நாம் இடைவிடாது, தவறாது அசதியிராமல் ஜெபிப்போமானால்,*** வசனத்திற்கு கீழ்படிந்து நடப்பவர்களாய் எமக்கு கிடைத்த தேவ ஊழியத்தை வைராக்கியத்தோடு செய்பவர்களாயும், சந்தர்ப்பம் வாய்க்கும் போதெல்லாம் புதியவர்களுக்கு சுவிஷேசம் சொல்லி தேவ இராஜ்யத்தின் காரியங்களை செயல்படுத்தும் போது நாம் ஆசீர்வாதங்களுக்குரியவர்களாய் மாறுவோம். தாமதமடையாதபடி இன்றே இப்போதே கைவிட்டுப் போன ஆத்மீக காரியங்களை மறுபடியும் ஆரம்பியுங்கள். புதிய ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளுங்கள். ***இன்று ஆசீர்வாதத்தின் நாள்!***

ஜெபம்

எம் அன்பான தேவனே! எனது அசதியினாலும், சோர்வினாலும் எனக்கென்று ஆயத்தப்படுத்தின சகல ஆசீர்வாதங்களைப் பெற முடியாத வருடங்கள் கடந்து போய் விட்டதை உணர்கிறேன். இன்றைய தினம் மறுபடியுமாக என்னை புதுபித்துக் கொள்கிறேன். சகல ஆசீர்வாதங்களால் என்னை நிரப்புங்கள். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"அவர்களுக்கு நன்மைசெய்யும்படி, நான் அவர்களை விட்டுப் பின்வாங்குவதில்லையென்கிற நித்திய உடன்படிக்கையை அவர்களோடே பண்ணி, அவர்கள் என்னைவிட்டு அகன்று போகாதபடிக்கு, எனக்குப் பயப்படும் பயத்தை அவர்கள் இருதயத்திலே வைத்து,"
(எரேமியா 32:40)

ஜீவ மன்னா

ஒக்டோபர் 25

சனி

**ஜாதிகளுக்குள்ளே உங்களை ஆசீர்வாதமாக விளங்கச் செய்யும் ஆண்டவர் !**

இன்றைய வேதவாசிப்பு

அப்போஸ்: அதி: 25 – 26

**"...நீங்கள் புறஜாதிகளுக்குள்ளே சாபமாயிருந்ததுபோலவே, ஆசீர்வாதமாயிருக்கும்படி நான் உங்களை இரட்சிப்பேன்; பயப்படாதேயுங்கள், உங்கள் கைகள் திடப்படக்கடவது."** (சகரியா 8:13)

நமது ஜீவனுள்ள இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் அன்பு தேவ பிள்ளைகளே! யாவரும் இன்றைய **இப் புதிய நாளினிலே புதிய ஈவுகளினால் நிரப்பப்படுமாறு ஆசீர்வதிக்கிறேன்.** உங்களை அழைத்தவர் உண்மையுள்ளவர். அவர் அப்படியே செய்வார். என்பதாக எமது வேதாகமத்தில் வசனம் கூறுகிறது. ஆகையால் எதைக் குறித்தும் கலங்காதீர்கள்! தேவன் உங்களை ஆசீர்வதிக்கும்படியாகவே இவ்வுலகத்திலிருந்து பிரித்தெடுத்துள்ளார்.

அருமையானவர்களே! கர்த்தர் உன் களஞ்சியங்களிலும் நீ கையிடும் எல்லா வேளையிலும் **உன் தேவனாகிய கர்த்தர் உனக்கு ஆசீர்வாதத்தை கட்டளையிடுவார். உன் தேவனாகிய கர்த்தர் உனக்கு கொடுக்கும் தேசத்திலே உன்னை ஆசீர்வதிப்பார்.** உங்கள் கைகளின் கிரியைகளை ஆசீர்வதிக்கும் அவர் தமது நல்ல பொக்கிஷசாலையாகி வானத்தையும் திறப்பதாக அவர் வேத வசனத்தில் விஷேசமாக **சகரியா 8:13**இல் "**...நீங்கள் புறஜாதிகளுக்குள்ளே சாபமாயிருந்தது போலவே ஆசீர்வாதமாயிருக்கும்படி நான் உங்களை இரட்சிப்பேன், பயப்டாதேயுங்கள், உங்கள் கைகள் திடப்படக்கடவது**" என்று கூறியிருக்கிறார். அல்லவா? எனது ஏழ்மை நிலைமையே மாறவில்லை எனது வருமானம் உயர்வடைய வழியில்லை என் வாழ்க்கை செழிப்படையக் கூடிய ஆசீர்வாதம் இன்னும் எனக்கே கிட்டவில்லை, **நான் எப்படி மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக இருப்பது என்று இவ் வேளையில் எண்ணுகிறீர்களா?** என் பெற்றோர் உறவினரின் ஆசீர்வாதத்திற்கு ஒரு பிரச்சினையாக இருக்கிறேன் என நினைக்கத் தோன்றுகிறதா? நினைத்துக் கொண்டிருக்கிறீர்களா?

ஆயினும் **நீங்கள் கலங்காதிருங்கள்!** உங்களைக் குறித்து துயர்வடைவதை நிறுத்துங்கள். இப்போது உங்கள் படைத்த தேவனை விசுவாசத்தோடு நோக்கிப் பார்த்து அவருடைய பொருத்தனைகளை விசுவாசியுங்கள். **உங்கள் வாழ்வை அவரிடம் ஒப்புக் கொடுத்து விசுவாசத்துடன் ஜெபியுங்கள். விசுவாசம் ஜெயம் தரும்.** உங்கள் சிந்தனை, பார்வை, இருதயம், கையின் கிரியைகள் யாவையும் பரிசுத்தத்தை காத்துக் கொள்ளும்படி உங்கள் நடவடிக்கைகள் மாறி **பரிசுத்த வாழ்க்கை வாழ்வதற்கு முற்படுங்கள்.** தேவன் அருவருக்கும் எந்தவொரு **தீமையான காரியமும் உங்களில் இராதபடி கவனமாக நடந்துக் கொள்ளுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார்! இன்றைய நாள் வெற்றியின் நாள்!**

ஜெபம்

என் அன்பு நேசரே! என்னை ஆசீர்வாதமாக மாற்ற வல்லவரே! என்னை பரிசுத்தப்படுத்தி சரியான பாதையில் நடக்கச் செய்து என்னை ஆசீர்வதித்து மற்றவர்களுக்கும் நான் ஆசீர்வாதமாக விளங்கும்படி ஆசீர்வதிக்கும்படி ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னைச் சபிக்கிறவனைச் சபிப்பேன். பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்றார்." (ஆதியாகமம் 12:3)

ஜீவ மன்னா
ஒக்டோபர் **26**
ஞாயிறு

# என் முகத்தைத் தேடுங்கள் என்று தேவன் சொல்லுகிறார் !

இன்றைய வேதவாசிப்பு
அப்போஸ்: அதி: 27 – 28

"என் முகத்தைத் தேடுங்கள் என்று சொன்னீரே, உம்முடைய முகத்தையே தேடுவேன் கர்த்தாவே, என்று என் இருதயம் உம்மிடத்தில் சொல்லிற்று." (சங்கீதம் 27:8)

அன்பான தேவ பிள்ளைகளே! துதிக்கும், மகிமைக்கும் பாத்திரரான சர்வ வல்லமை பொருந்திய ஜீவிக்கின்ற **இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தினால் ஜெயம் கொண்டு புதிய நாளில் இனிதே மகிழ்ச்சியுடன் வாழுமாறு வாழ்த்துகின்றேன்.** ஜீவனுள்ளவரும் எம்மை உருவாக்கினவருமான தேவன் மிகவும் அன்புள்ளவர். அவருடைய சந்ததியின் பிள்ளையாக மாறும் பொருட்டு அவருடைய குமாரனாகிய **இயேசுகிறிஸ்துவினிடத்திற்கு எம்மை அழைத்த பரம தகப்பன் எம்மீது அளவில்லா அன்பு கொண்டுள்ளார்.** நாம் நேசிக்கும் ஒருவரை அடிக்கடி காணவும், அவரோடு பேசவும், எம் நேரங்களை அவரோடு கழிக்கவும் எமது இருதயம் மிகவும் விரும்புகிறதல்லவா?

அன்பு பிள்ளைகளே! எமது அன்பான தேவன் அவ்வண்ணமாகவே இருக்கிறார். **எம்மை பார்க்கவும், எம்மோடு கதைக்கவும், எம்மோடு இருக்கவும் அவர் மிகவும் விரும்புகிறார்.** ஆகையால் நாங்கள் வாஞ்சையோடு எந்நேரமும் அவர் முகத்தை தேட வேண்டும். நாம் முழங்கால்படியிட்டு, கரம்கூப்பி, கண்களை மூடி பரத்திலிருக்கும் எம் தேவனை நோக்கி ஜெபிக்க வேண்டும். ஜெபிக்காது தேவனோடு உறவாடவோ எம் நேரத்தை அவரோடு கழிக்கவோ முடியாது. ஏனெனில் அவர் ஆவியாய் இருக்கிறார். **அவர் பரிசுத்த ஆவியாக எம் ஆத்துமாவோடு சம்பந்தம் கொள்கிறார்.** ஆகையால் எங்கள் ஆத்துமா அவரை கிட்டிச் சேரவேண்டும். இதனால் தான் தாவீது ராஜா **சங்கீதம் 27:8**இல் **"என் முகத்தைத் தேடுங்கள் என்று சொன்னீரே, உம்முடைய முகத்தையே தேடுவேன் கர்த்தாவே என்று என் இருதயம் உம்மிடத்தில் சொல்லிற்று"**இப்படி கூறுகிறார்.

தேவ பிள்ளைகளே! ஆகையால் **நீங்கள் தவறாது எந்நேரமும் ஜெபத்தில் தரித்திருந்து அவர் முகத்தை தேடுங்கள்.** நீங்கள் முழு இருதயத்தோடும், தாகத்தோடும் இயேசுவைத் தேடினால் அவரது முகத்தை காணலாம். **ஆவியானவருக்கூடாக அவர் உங்களை நெருங்கி உங்கள் ஆத்துமாவை வல்லமையால் நிரப்புவார்.** உங்கள் எதிர் காலத்தைக் குறித்து ஆலோசனை சொல்லுவார். சாத்தானுடைய சூழ்ச்சிகளில் அகப்பட்டு விடாதபடி அவைகளை நீங்கள் அறியும்படி செய்வார். உங்களை தந்திரமான காரியங்களிலிருந்து மீட்டுக் கொள்வார். இவைகள் நடக்கும்படியாக நீங்கள் எப்போதும் தேவனுடைய **முகத்தை வாஞ்சையோடு தேட வேண்டும். உங்களுக்கு வெற்றித் தரும் நாள்!**

**ஜெபம்**

எங்கள் அன்பின் தேவனே! உங்கள் முகத்தை தேடுபவர்களின் வாழ்வின் அநேக ஆசீர்வாதங்களை அருளுபவரே! இன்றைய நாளிலிருந்து உங்கள் முகத்தை கண்ணீருடன் தேட் ஜெபத்தில் தரித்திருக்க கிருபை தாருங்கள். சகல தடைகளையும் நீக்கி என்னை வல்லமையால் நிரப்புங்ககள். இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"நான் கர்த்தர், இது என் நாமம்; என் மகிமையை வேறொருவனுக்கும், என் துதியை விக்கிரகங்களுக்கும் கொடேன்." (ஏசாயா 42:8)

ஜீவ மன்னா
ஒக்டோபர் 27
திங்கள்

## எம்மை நீதிமான்களாக மாற்றும் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு
ரோமர்
அதி: 01 – 02

**"கிறிஸ்துவுக்குள் நீதிமான்களாக்கப்படும்படி நாடுகிற நாமும் பாவிகளாகக் காணப்படுவோமானால் கிறிஸ்து பாவத்திற்கு காரணரோ? அல்லவே"** (கலாத்தியர் 2:17)

அன்பான தேவ பிள்ளைகளே! பூமியிலுள்ள கடையாந்தரங்களைத் சிருஷ்டித்த கர்த்தராகிய அநாதி **தேவனின் வல்லமையுள்ள நாமத்தினால் இந்த இதமான அதிகாலை நேரத்தில் சகல நன்மையின் ஈவுகளைப் மகிழ்ந்திருக்குமாறு ஆசீர்வதிக்கிறேன்.** தேவ பிள்ளைகளே! இப் புவிதனில் பாவிகளாய் வாழ்ந்துக் கொண்டிருந்த எம்மை இரட்சித்து பரிசுத்த ஆவியானவருக்கூடாக **நீதிமான்களாக ஜீவிக்கும்படியாக** தயை கூர்ந்த ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவிற்கு **நானும் நீங்களும் எமது வாழ்நாள் முழுவதும் நன்றி சொல்ல கடமைப்பட்டவர்களாய் இருக்கிறோம்.** இதுவே பரிசுத்த தேவனாகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து அவரை ஏற்றுக்கொண்டு ஜீவிக்கும் சகலருக்கும் தேவன் கொடுக்கும் வரப்பிரசாதமாகும்.

தேவ பிள்ளைகளே! சகலரும் பாவிகளாயிருக்கிறபடியால் தேவ மகிமை குறைவுப்பட்டதாயிருக்கிறது. என்றபடியால் மனிதர்கள் யாவரும் கிறிஸ்துவுக்குள்ளாய், **பரிசுத்தவான்களாய் மாறுவது அவசியமாகிறது.** இதையே **கலாத்தியர் 2:17**இல் வசனம் கிறிஸ்துவுக்குள் நீதிமான்களாக்கப்படும்படி என கூறுகிறது. ஆயினும் தேவனால் மீட்கப்பட்ட தேவ பிள்ளைகளே! தேவனால் அழைக்கப்பட்டவர்களாய் **இயேசுகிறிஸ்துவின் பரிசுத்த இரத்தத்தினால் உங்கள் பாவங்கள் யாவும் கழுவப்பட்டு பரிசுத்தமாக்கப்பட்டவர்களாய் விளங்கும்.** நீங்கள் பாவம் செய்யாதபடி ஜாக்கிரதை உள்ளவர்களாய் இருங்கள். மறுபடியும் உங்களை பாவத்திற்குட்படுத்தும்படியாக **சத்துருவான சாத்தான் உங்களை பின் தொடர்ந்துக் கொண்டேயிருப்பான்.** எதிராளியான அவனிடம் கவனமாயிருங்கள். அவன் தனது தூதர்களை அனுப்பி உங்கள் உள்ளத்தை வேதனைக்குள்ளாக்கி அநேக பாதிப்புகளை ஏற்படுத்துவான். துன்பங்களை உண்டு பண்ணி மறுபடியும் பாவம் செய்யத் தூண்டுவான். அல்லது **மனிதர்களுக்கூடாய் பாவச் சோதனைகளை உண்டு பண்ணுவான்.** ஆகையால் எப்போதும் ஜெபத்தோடு தேவன் அருகில் நெருங்கி சேர்ந்துக் கொள்ளுங்கள்.

தேவ பிள்ளைகளே! தேவ வார்த்தைகளை வாசித்தறிந்து அதன்படி **உங்கள் வாழ்க்கையை செப்பனிட்டு தேவனுக்கு உகந்தபடி ஜீவியுங்கள். அப்போது சாத்தானுடைய திட்டங்கள் நிர்மூலப்படுத்தப்படும்.** தேவ வார்த்தையின் வல்லமையால் நீங்கள் காக்கப்படுவீர்கள். ஆயினும் தேவனுக்குள் **நீதிமானாக விளங்கும்** உங்களுக்கு உபத்திரவங்கள் வரும். ஆயினும் **கலங்காதீர்கள்! உங்களை நீதிமானாக்கும் தேவன் உங்களோடிருக்கிறார். ஆசீர்வாதமான நாள்!**

ஜெபம்

பரிசுத்த தேவனே! என்னை பரிசுத்தம்படுத்தும்படியாக உங்கள் புத்திரனாகிய இயேசுவை உலகிற்கு அனுப்பினவரே நன்றி! நான் பரிசுத்தவானாக ஜீவிக்கும்படி எனக்கு உதவி செய்தருளுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக்கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள்;" (ரோமர் 3:24)

ஜீவ மன்னா

ஒக்டோபர் 28
செவ்வாய்

# உங்களை ஒரு போதும் வெட்கப்படுத்தாத தேவன் !

இன்றைய வேதவாசிப்பு
ரோமர்
அதி: 03 – 04

**“என் ஜனங்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போவதில்லை.”**
(யோவேல் 2:26)

தேவனுக்குள் பிரியமான என் தேவ பிள்ளைகளே! ஜீவனுள்ள ***இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் இன்றைய தினம் மனமகிழ்ச்சியின் நாளாக திகழுமாறு வாழ்த்துகின்றேன்.*** “உலகமுடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடன் கூட இருக்கிறேன்.” என்று எமக்கு வாக்கு கொடுத்த ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய இயேசுவானவர் இன்றைய தினமும் உங்களோடிருந்து பிதாவின் சகல ***ஆசீர்வாதங்களையும் பெற்றுக் கொள்ளும்படியாக உங்களுக்காக பரிந்து பேசுகிறவராய் இருக்கிறார்.*** ஆகையால் ***நீங்கள் அதிர்ஷ்டசாலியாய் இருக்கிறீர்கள். ஆகையால் எதைக் குறித்தும் கவலைப்படாதீர்கள்!***

அன்பார்ந்தவர்களே! நீங்கள் ஒரு வாகனத்தில் பயணிக்கும் போதும் போது வழியில் இருபுறமுள்ளவைகள் அனைத்தும் முன்னோக்கி வேகமாக செல்வதைப் போல் தோன்றுகிறதல்லவா? உண்மை அதுவல்லவா? நீங்களல்லவா அவைகளையெல்லாம் கடந்து முன்னோக்கிச் செல்கிறீர்கள். அதே போல் ***உங்கள் வாழ்க்கைப் பாதையிலும் யாவற்றையும் கடந்து முன்னோக்கிச் செல்ல முடியும்.*** இதையே பவுல் பிலிப்பியருக்கு கூறியுள்ளார். ***பிலிப்பியர் 3:13***இல் “பின்னானவைகளை மறந்து முன்னானவைகளை நாடி தொடருகிறேன்.” என்று உங்கள் வாழ்க்கை வழிப் பயணத்தில் வந்த நெருக்கமான இடறல்களை கடந்து முன்னோக்கி சென்றுக் கொண்டிருக்கிறீர்களா? ***மறுபடியும் பின்னோக்கி திரும்பி கடந்து போனவைகளை பாராதபடி அவைகளை மறந்து முன்னேறுங்கள்.*** உங்களை ஆத்மீக ஜீவிய பாதைக்கென்று அழைத்த ***தேவ பிதாவானவர் உங்களோடிருக்கிறார்.***

தேவ பிள்ளைகளே! மேலே தரப்பட்ட பிரதான வேத வாக்கியம் **யோவேல் 2:26**இல் ***“கர்த்தர் சொல்லுகிறார் ...என் ஜனங்கள் ஒரு போதும் வெட்கப்பட்டுப் போவதில்லை”*** என்று எழுதப்பட்டுள்ளது. தமது ஒரே குமாரனின் நிமித்தமாக உங்களை தமது சொந்த பிள்ளையாக தெரிந்துக் கொண்டவரான, ***எமது பரலோக தேவன் ஒரு நாளும் உங்களை கைவிடமாட்டார்.*** உங்கள் வாழ்விலே நீங்கள் முகங் கொடுக்க நேர்ந்த துக்கரமான மனவேதனையை உண்டு பண்ணின எந்த பிரச்சினை வேளையிலும் ***உங்கள் உள்ளம் கலங்க இடமளிக்காதீர்கள். உங்களுக்கு கஷ்டங்கள், பிரச்சினைகள், துன்பங்கள், இன்னல்கள் சூழ்ந்துக் கொள்ளும்போது*** மனிதர்கள் உங்களுக்கு விரோதமாக உங்களை அவமானப்படுத்தி, நிந்தித்து குறை கூறுவார்கள். சகலவற்றையும் ***தேவ பாதத்தில் வைத்து ஜெபித்து விட்டு, உங்கள் வழிப்பயணத்தை தொடருங்கள்.*** பிதாவானவர் உங்களுக்கு வெற்றியை உண்டு பண்ணுவார். ***உங்களுக்கு ஜெயம் தரும் நாள்!***

**ஜெபம்**

மகா கிருபையுள்ள பரலோக பிதாவே! என்னை வெட்கப்படுத்தாதவரே! உம்மையே நோக்கிப் பார்த்து யாவற்றையும் உம்மிடம் ஒப்படைத்து முன்னானவைகளையே நாடி செல்கிறேன். நீங்கள் எனக்கு ஜெயமளிக்கும்படியாக இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

“உங்கள் வெட்கத்துக்குப் பதிலாக இரண்டத்தனையாய்ப் பலன் வரும்; இலச்சைக்குப் பதிலாகத் தங்கள் பாகத்தில் சந்தோஷப்படுவார்கள்; அதினிமித்தம் தங்கள் தேசத்தில் இரட்டிப்பான சுதந்தரம் அடைவார்கள்; நித்திய மகிழ்ச்சி அவர்களுக்கு உண்டாகும்.” (ஏசாயா 61:7)

ஜீவ மன்னா

ஒக்டோபர் 29 புதன்

# தேவனை அறிகின்ற அறிவை விரும்பும் தேவன்!

இன்றைய வேதவாசிப்பு

ரோமர் அதி: 05 – 06

"பலியை அல்ல இரக்கத்தையும், தகனபலிகளைப்பார்க்கிலும் தேவனை அறிகிற அறிவையும், விரும்புகிறேன்." (ஓசியா 6:6)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! அன்பின் கரத்தினால் எம்மை அரவணைத்து காக்கும் ஜீவனுள்ள தேவன் **இயேசுகிறிஸ்துவின் வல்லமையுள்ள நாமத்தினால் யாவரும் சுகமாய் இனிதே வாழுமாறு இன்றைய தினத்தில் உங்களை ஆசீர்வதிக்கிறேன்.** எங்கள் தேவனாகிய ஆண்டவர் **அரூபியாக எம் மத்தியில் வாசம் பண்ணுகிறார்** என்பதை, அவரது வார்த்தைகளைக் கேட்டு, அவைகளை வாசித்தறிந்து, அவரை விசுவாசிக்கும் **நீங்கள் மெய்யாகவே ஆசீர்வதிக்கப்பட்டவர்களாவீர்கள்.** ஏனெனில் தேவனை காணாது அவரை விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள்! என்று இயேசுகிறிஸ்து வெளிப்படுத்தியுள்ளார்.

தேவ ஜனமே! ஒருவன் என் வார்த்தையை கேட்டும் விசுவாசியாமற் போனால் **என் கிரியைகளை கண்டாவது விசுவாசிக்கக்கடவன் என வேத வசனத்தில் கூறப்பட்டுள்ளது.** இதன்படி பார்த்தால் சகல மனிதர்களும் **மெய் தெய்வமான இயேசுவை அறிந்துக் கொள்ள வேண்டுமென்பது. பரலோக பிதாவின் விருப்பமாய் இருக்கிறது.** இன்றைய எம் தலைப்பு வேத வசனத்தில் **ஓசியா 6:6இல் "பலியை அல்ல இரக்கத்தையும், தகனபலிகளைப் பார்க்கிலும் தேவனை அறிகிற அறிவையும் விரும்புகிறேன்."** என்று சொல்கிறது. ஆகையால் தேவ பிள்ளைகளே! **விஷேசமாக நாங்கள் அவரைக் குறித்து மிகவும் நன்றாக அறிந்துக் கொள்ள வேண்டும். அவருடைய குணதிசயங்கள் என்ன? அவருடைய சித்தம் என்ன? எதிர்பார்ப்பு என்ன? எமக்காய் என்ன செய்தார்? அவர் யார்? அவருடைய சுபாவம் எப்படிப்பட்டது?** அழைத்தவர்களைக் குறித்து அவரது திட்டம் என்ன? என்பதையெல்லாம் நாம் அறிந்துக் கொள்ள வேண்டும்.

தேவ பிள்ளைகளே! ஆகையால் நீங்கள் எந்நேரமும் வேத புத்தகத்தை எடுத்து வாசிக்க வேண்டும். ஏனெனில் எம் தேவாதி தேவனை குறித்து சகல காரியங்களும் வேதத்தில் எழுதப்பட்டிருக்கிறது. **வேதாகமத்தை வாசிக்காது,அதில் எழுதப்பட்டவைகளை கற்றுக்கொள்ளாது தியானிக்காது தேவனை குறித்து அறிந்துக் கொள்வதும், வசனத்தின் உள்ளார்ந்த கருத்துக்களை தெரிந்து கொள்வதும் இயலாததொன்றாகும்.** நீங்கள் பரலோக தேவனை குறித்து அறிந்துக் கொண்டால் மாத்திரம் போதும் என்று நினையாதபடி மேலும், மேலும் அவரை வாஞ்சித்து அவரது மகிமையினால் நிரம்பி **விசுவாசத்தை பெருகிக் கொள்ளுங்கள்.** அவரைக் குறித்து எம்முடைய அறிவு பெருகப், பெருக எமது ஆத்மீக வாழ்க்கை லௌகீக வாழ்க்கையில் ஏற்படும் மாறுதல்கள் **எமக்கு பலத்த ஆசீர்வாதங்களை கொண்டு வரும். தேவனுடைய** ஜீவ வார்த்தைகள் கட்டுக்களை நீக்கி, விசுவாசத்தை வளர்த்து, வாழ்க்கையை உயர் நிலையடையச் செய்யும். **இன்றைய நாள் ஆசீர்வாதம் பெருகும் நாள்!**

ஜெபம்

மகா பரிசுத்த தேவனே! எம் பலிகளைப் பார்க்கிலும் உம்மை குறித்த அறிவின் பெருக்கத்தை காண விரும்புகிறவரே! நான் வேத வார்த்தைகளில் பிரியமாயிருந்து கற்றறிந்து உம்மை அறிகிற அறிவில் வளர கிருபையருளுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன் ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"என்னை அறிந்தீர்களானால் என் பிதாவையும் அறிந்திருப்பீர்கள்; இதுமுதல் நீங்கள் அவரை அறிந்தும் அவரைக் கண்டும் இருக்கிறீர்கள் என்றார்."
(பரி.யோவான் 14:7)

ஜீவ மன்னா

ஒக்டோபர் 30

வியாழன்

# தமக்கு பயந்தவர்கள் மேல் கர்த்தர் பிரியமாயிருக்கிறார் !

இன்றைய வேதவாசிப்பு

ரோமர் அதி: 07 – 08

**"தமக்குப் பயந்து, தமது கிருபைக்குக் காத்திருக்கிறவர்கள்மேல் கர்த்தர் பிரியமாயிருக்கிறார்."** (சங்கீதம் 147:11)

தேவனுக்குள் பிரியமான என் அன்பு தேவ பிள்ளைகளே! தேவன் நிற்கிற இப் பூமியில் எம்மையும் அவர் நிற்கச் செய்திருக்கிறார். ***ஜீவனுள்ள தேவனுடைய நாமத்தால் இந்நாள் நந்நாளாக அமையுமாறு வாழ்த்துகின்றேன்.*** எமது தேவனானவர் மகிமை நிறைந்தவர், மகா பரிசுத்தர், வல்லமை பராக்கிரமுடைய பரலோக பிதாவானவர், அவர் இவ்வளவாய் உயர்ந்தவரும், உன்னதமானவராகிலும், ***அவர் எம்மீது அளவுக்கடந்த, அளவில்லா அன்புள்ளவராயிருக்கிறார்*** என்பது சத்தியம். ஆயினும் சில வேளைகளில் எங்களால் இதை விசுவாசிக்கவோ, புரிந்துக் கொள்ளவோ முடியாமல் இருக்கிறது.

தேவ பிள்ளைகளே! ***உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக!*** அவருடைய அன்புக்கு நிகராக இப் பூமியில் எதுவுமேயில்லை. ஆகையால் அன்புக்கு பாத்திரவாளியாக இருப்பதால், ***நீங்கள் மகா பேறுபெற்ற அதிர்ஷ்டசாலிகளாவீர்கள்!.*** நாம் தேவனுக்கு பயப்படுகிறவர்களாகவும், கிருபையை எதிர்பார்த்து காத்திருப்பவர்களாகவும் இருக்க வேண்டும் என வேத வாக்கியம் ***சங்கீதம் 147:11***இல் கூறுகிறது. இயேசுகிறிஸ்து இவ்வளவாய் எம்மை நேசித்து எம்மீது பிரியம் கொண்டு அன்பு செலுத்தும் போது நாம் ***ஏன் அவருக்கு பயப்பட வேண்டும் என நினைக்கிறீர்களா?*** தேவ பிள்ளைகளே! பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் மீது கொண்டுள்ள பாசம், அன்பு இதனிமித்தம் அவர்களை எப்போதும் மகிழ்ச்சியாய் வைத்திருக்க விரும்புகிறார்கள். குழந்தை பருவத்தில் பிள்ளைகளை மிகச் செல்லமாக அனைத்து அன்பு செலுத்துவார்கள். ஆனாலும் ***பிள்ளைகள் சிறு வயது முதலே தமக்கு பயந்து நடக்கிறவர்களாய், கீழ்படிகிறவர்களாய், கௌரவிக்கிறவர்களாய் இருக்க வேண்டும் என விரும்புகிறார்கள்.*** சிறு வயதிலேயே இப்படி வாழ்ந்தால் தான் வளர்ந்த பிள்ளைகளாக மாறும் போது நல்ல பிள்ளைகளாகவும், கீழ்படிவுள்ளவர்களாகவும் தமக்கு கௌரவத்தை தேடித் தருபவர்களாகவும் விளங்குவார்கள் என்பதை பெற்றோர் அறிந்தவர்களாய் இருக்கிறார்கள்.

தேவ பிள்ளைகளே! எமது சரீர பிரகாரமாக எமக்கு கிடைக்கப் பெற்ற பெற்றோர்களே இவ்வண்ணம் தமது பிள்ளைகளை குறித்து செயற்படுவார்களாயின் எமது ஆத்துமாவை பரலோக இராஜ்ஜியம் கொண்டு செல்லும்படி, எம்மை உலகத்திலிந்து பிரித்தெடுத்தவருக்கு நாம் எவ்வளவாய் அவருக்கு கௌரவம் செலுத்த வேண்டும்? எப்படி அவருக்கு கீழ்படிய வேண்டும்? என்றெண்ணி அவருக்கு பயந்து நடப்போம், அவரது கிருபைக்கு காத்திருக்கிறவர்களாய் இருப்போம். ***எம்மில் தேவ பயம் இல்லாவிடில் நாம் பாவம் செய்ய அஞ்சாதவர்களாய் இருப்போம்.*** ஆகையால் ***நாம் தேவனுக்கு பயந்து நடந்து அவரது கிருபைக்கு காத்திருப்போம்.*** அப்போது எம்மீது விருப்பமாயிருந்து, நிறைவான ஆசீர்வாதத்தை எமக்கருளுவார். ***இன்றைய நாள் ஆசீர்வாதமான நாள்!***

ஜெபம்

எம்மை மிகவும் நேசிக்கும் அருமை இரட்சகரே! உங்களுக்கு பயப்படுகிறவர்கள், உங்கள் கிருபைக்கு காத்திருக்கிறவர்கள் மீது மிகவும் பிரியமுள்ளவரே! என்னையும் உங்களுக்கு பயந்து உங்கள் கிருபையை எதிர்பார்த்து உங்களுக்கு பிரியமாய் ஜீவிக்க தயை கூர்ந்தருளும்படி இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன் ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"ஆனாலும் சீயென்றிகழப்படத்தக்கதும் அருவருக்கப்படத்தக்கதுமான தங்கள் இருதயத்தின் இச்சையிலே எவர்கள் நடக்கிறார்களோ அவர்களுடைய வழியின் பலனை அவர்கள் தலைகளின்மேல் சுமரப்பண்ணுவேன்... என்று..." (எசேக்கியேல் 11:21)

ஜீவ மன்னா

ஒக்டோபர் **31** வெள்ளி

**உங்கள் வாழ்வின் அச்சங்களை நீக்கி புது பெலன் அளிக்கும் தேவன்!**

இன்றைய வேதவாசிப்பு

ரோமர் அதி: 09 – 10

"...யாக்கோபு திரும்பிவந்து அமர்ந்து சுகித்திருப்பான்; அவனைத் தத்தளிக்கப்பண்ணுகிறவனில்லை." (எரேமியா 30:10)

உன்னதமானவரை உறைவிடமாக்கிக் கொண்ட தேவனுடைய பிள்ளைகளே! தேவ கிருபை உங்கள் மத்தியில் கடந்து வரும் உதயமான காலைப் பொழுதினில் இம்மாதத்தின் இறுதி நாளாகிய இன்றும் சகல நன்மைகளினால் எம்மை ஆசீர்வதித்த தேவனுக்கு நன்றி! செலுத்தி, **இன்றைய நாள் மகிழ்ச்சிகரமான நாளாக அமையுமாறு வாழ்த்துகின்றேன்.** இப்புவியில் வாழும் ஒவ்வொரு மனிதனும் தான் ஆரோக்கியமாக **நல்ல சுகத்தோடு எந்தவிதமான அச்சம், பயமின்றி செழிப்போடு, மகிழ்வோடு வாழ்வதையே விரும்புகிறான்.** ஆயினும் இப்படியான வாழ்வு அமைவது மிக அரிதாகவே உள்ளது. அநேக மனிதர்கள் சுகம்,மகிழ்ச்சி இன்றி துக்கத்துடனும், வேதனையுடனும் காலத்தை கழிக்கிறார்கள். ஆனால் **ஜீவனுள்ள தேவன் எம் படைப்பின் கர்த்தரை குறித்து அறிந்தவர்கள் யாவரும் பேறு பெற்ற அதிர்ஷ்டசாலிகளாவோம்!**

தேவ பிள்ளைகளே! மகா பெரிய செல்வந்தர்கள் வசிக்கும் **இப்பூமியில் வறுமையில் வாழும் ஏழைகளும் வாழ்கிறார்கள்.** எவ்வளவு பணம், சுகபோகம், வசதியான வாழ்வு இருந்த போதும் அதை அவனுக்கு அநுபவிக்க முடியாதிருக்குமானால் அவன் வாழ்வில் மகிழ்ச்சி ஏது? எவ்வளவு பணம் கையிருப்பில் இருந்தாலும் தான் விரும்புகிற சுவையான, ருசியான **உணவு பதார்த்தங்களை உண்ண முடியாமல் வியாதி அவன் சரீரத்தில் இருக்குமானால் அவனது நிலைமை எவ்வளவு பரிதாபமானதாகும்.** அதே நேரம் ஓர் ஏழை மனிதனின் சரீரத்தில் எந்த நோயும் இல்லாதவனாக, சுகவாழ்வு வாழ்பவனாய் அனுதினமும் தான் உழைக்கும் பணத்தைக் கொண்டு விரும்புகிற உணவு வகைகளை சாப்பிட்டு வாழ்வானாகில் அந்தச் செல்வந்தனைப் பார்க்கிலும் இந்த **ஏழை மனிதன் பாக்கியவான் அல்லவா?** நோயானது ஏழை, பணக்காரன் என வித்தியாசமறியாது. இவைகளில் எப்பலனும் இல்லை. மனிதனுடைய வாழ்க்கையின் சந்தோஷம் தரும் சரீர பெலன், சுகம், ஆரோக்கியத்தை தரக் கூடியவர் ஒரே ஒருவரே! **அவர் தான் எம்மை படைத்து ஆளுகை செய்யும் சர்வ வல்லமையுள்ள தேவன்.**

அன்பார்ந்தவர்களே! **உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக! எரேமியா 30:10இல்** வேதத்தில் **"நீங்கள் சுகித்திருப்பீர்கள்** என்றும் **உங்களை தத்தளிக்கப்பண்ணுகிறவனில்லை"** என்றும் கூறப்பட்டுள்ளது. அன்று இஸ்ரவேலுக்கு சொன்ன வார்த்தைகள் இன்று உங்களுக்குரியதாக உள்ளது. **நீங்கள் பயப்படாதீர்கள்!** மனிதர்களோ, பொல்லாத ஆவிகளாலோ உங்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது. **நீங்கள் நோய்வாய்ப்பட்டு, கைவிடப்பட்டு துன்பத்திலும், வேதனையிலும், கண்ணீரிலும் தத்தளிக்கும் நிலமை ஒரு போதும் ஏற்படாது.** தேவ பயத்தோடு கூடிய பரிசுத்தமான வாழ்க்கையை வாழுங்கள். எப்போதும் அவரில் விசுவாசமாயிருங்கள். அன்று யாக்கோபு எவ்வண்ணமாக தேவனால் காக்கப்பட்டாரோ அப்படி **இன்றும் உங்கள் வாழ்க்கையை குறித்தும் அச்சம், பயமின்றி அமைதியுடனும், சுகபெலத்துடனும் ஜீவிக்க கர்த்தர் அநுக்கிரகம் செய்வார். இன்று ஜெயம் தரும் நாள்!**

**ஜெபம்**

என் பிதாவே! நீங்கள் இஸ்ரவேலின் தேவனாக இருந்தது போல் இன்றும் என் தேவனாக இருக்கிறீர்கள். என் வாழ்வை உங்கள் கரத்திற்குள் ஒப்படைக்கிறேன். உங்கள் சித்தம் போல் செயற்படவும் பயமின்றி சுகத்துடன் வாழவும் எனக்கு ஒத்தாசை புரியுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். –ஆமென்–

**வேத வாக்குத்தத்தம்**

"என் ஜனம் சமாதான தாபரங்களிலும், நிலையான வாசஸ்தலங்களிலும், அமைதியாய்த் தங்கும் இடங்களிலும் குடியிருக்கும்." (ஏசாயா 32:18)





# அட்டைப்பட விளக்கம்

அன்பார்ந்தவர்களே! ஜீவ மன்னா தின மஞ்சரியின் 37வது இதழில் அட்டைப்படத்தில் இம்முறை நீங்கள் காண்பது டய்டெனிக் கப்பலாகும். இந்த டய்டெனிகா எனும் கிரேக்க வசனத்தின் கருத்தானது படைப்பின் தேவனுக்கும் இந்த கப்பலை மூழ்க வைக்க முடியாது என்பதனையே இணையதளத்தில் காணக் கூடியதாகவுள்ளது. ஆனாலும் கப்பலின் பெயரைச் சொன்னவுடன் எல்லோருக்கும் ஞாபகம் வருவது இளவயது பெண்ணினதும், வாலிபனினதும் காதல் கதையை ஆகும். ஆனாலும் நான் உங்களுக்கு அட்டைப்பட விளக்கமாகக் கூறுவது அங்கே காணப்படும் தேவ வசனத்தைக் குறித்து தேவன் எனக்கு வெளிப்படுத்திய ஆத்மீக காரியத்தையாகும்.



உலகில் காணப்படும் ஐஸ்வரியம் நிறைந்த நாடான இங்கிலாந்தில் இந்தக் கப்பல் செய்யப்பட்டதோடு சுமார் 3000 ஜனங்கள் வேலைக்கமர்த்தப்பட்டு 3 வருடக்காலமாக கப்பல் நிர்மாணிக்கப்பட்டது என செய்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. இது முழு உலகத்திலும் விசாலமான கப்பலென தீர்மானிக்கப்பட்டு, மிகவும் சுகபோகங்கள் நிறைந்த சிறந்த உல்லாசக் கப்பல் என செய்திகள் கூறுகின்றன. முதன் முதல் சென்ற மங்களகரமான பிரயாணத்தில் கடலிலிருந்த பெரிய பனிமலையில் கப்பலின் முகப்பகுதி மோதிய சில மணி நேரங்களில் டய்டானிக் கப்பல் அடி சுமார் 12000 ஆழமான பகுதியில் இறங்கி மூழ்கியது. காப்பாற்றப்பட்ட சுமார் 700 மனிதர்களின் விபரங்கள் மாத்திரமே கிடைத்தன.

உலகில் மனிதன் நம்பிக்கையுடன் அவன் கட்டுகின்ற சுகபோகங்கள் நிறைந்த மிகச் சிறந்த கப்பலில் உல்லாசப் பிரயாணத்தில் ஈடுபட்ட மனிதர்களின் பிரயாணம் முடியும் முன்னர் நிகழ்ந்தது என்ன? அது அப்படியாயினும் பவுல் எனும் தேவ மனுஷன் இத்தாலிக்குச் செல்ல கப்பலேறினார் என்றும் அவர் பிரயாணஞ் செய்த கப்பலில் இருந்த மனிதர்களின் எண்ணிக்கை 276 என்றும் யுரேக்கிலிதோன் எனும் காற்றில் அகப்பட்டு பல தினங்கள் கடலில் இங்குமங்குமாக பிரயாணம் செய்து 14 நாட்களுக்குள் பிறகு கப்பல் மெலித்தா எனும் தீவிற்கு வந்ததாக அப்போஸ்தலர் நடபடிகளில் 27,28 அதிகாரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. தேவ மனிதனான பவுலைத் தவிர கப்பலிருந்த அனைவரும் தமது வாழ்வைக் குறித்த எதிர்பார்ப்புக்களை கை விட்டு விட்டார்கள். ஏனென்றால் அநேக நாளாய்ச் சூரியனையாவது, நட்சத்திரங்களையாவது காணப்படாமல் பெருங்காற்றும், மழையும் அடித்துக் கொண்டிருந்தது. என வேதாகமத்தில் எழுதப்பட்டுள்ளது. ஆனாலும் ரோம் நகருக்கு பிரயாணம் செய்த பவுல் எனும் தேவ மனுஷன் நிமித்தமாகவே 275 மனித உயிர்கள் காப்பாற்றப்பட்டதோடு பாதுகாப்பாக அனைவரும் துறைமுகத்திற்கருகில் வந்து சேர்ந்தார்கள்.



அன்பார்ந்தவர்களே! இந்த அட்டைப்பட விளக்கத்தில் நாம் கற்றுக் கொள்ள விஷேசமானதொன்றுண்டு, நாசியுள்ள சுவாசமுள்ள மனிதர்களை நம்பி அவர்களது வார்த்தையின் பேரில் விசுவாசங் கொண்டு கப்பலின் அழகைக் கண்டு ஆசையோடு கப்பலேறிய 2229 பேரில் 1500க்கு அதிகமானோர் இறந்தது ஏன்? ஏன தேவ வசனத்தைக் குறித்து தியானித்துப் பாருங்கள்.

இதைக் குறித்து நன்றாக சிந்தியுங்கள். டய்டெனிக் கப்பலேறிய மனிதர்களைப் போன்று நீங்கள் உலக சுகபோகங்களில் பற்றுதல் கொண்டு உங்கள் ஆத்மீக வாழ்வை அழித்துக் கொள்ளாதீர்கள். ஏனென்றால் உலக மனிதர்கள் அவர்களின் வார்த்தை, உலக சுகம், சொத்து என்பவைகளை விசுவாசித்து உங்கள் ஆத்மீக வாழ்வில் ஜெயங் கொள்ள முடியாது. அன்று பவுல் எனும் தேவ மனிதனோடு இருந்த தேவன் இன்றும் ஜீவிக்கின்றவராக உங்களோடிருப்பதனால் தேவனை விசுவாசித்து உங்கள் வாழ்வெனும் கப்பலை ஆத்மீக பயணத்தில் முன்னொக்கிக் கொண்டு செல்லுங்கள். தேவன் உங்களை சரியான துறைமுகத்திற்கு கொண்டு சேர்த்திடுவாராக!

# கையடக்கத் தொலைபேசியின் மூலம் சுகம், அற்புதம் பெற்றுக் கொள்ள முடியும்.

## கணனி நேரடி ஒளிப்பரப்புக்கு நீங்களும் பிரவேசிக்கலாம்.

பிரியமான தேவ பிள்ளைகளே!
எங்களுடைய சுகமளிக்கும் ஆராதனை ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் காலை 9.30 மணியிலிருந்து நேரடி ஒளிபரப்பாகும். அவ்வேளையில் உங்களுடைய கையடக்க தொலைபேசியிலோ அல்லது கணனி நேரடி ஒளிப்பரப்பின் மூலம் முழுமையான சுகமளிக்கும் ஆராதனையை நேரடியாக காண்பதற்கு முடியும். இதைக் குறித்து கையடக்க தொலைபேசியில் எந்தவித பணமும் அறவிடபடமாட்டாது என்பதை கருத்திற் கொள்ளவும்.

அதற்கு மேலாக எங்களுடைய வெப் நேரடி ஒளிபரப்பின் மூலம் எல்லா நிகழ்ச்சிகளும் ***USTREAM*** தளத்திலே சேகரிக்கப்படுகின்றதென்பதையும் 2013 டிசம்பர் மாதத்திலிருந்து இன்றைய நாள் வரையிலான எல்லா ஆராதனைகளையும் உங்களால் காண முடியும் என்பதை அறியத்தருகிறோம்.



**எங்களுடைய கணனி நேரடி ஒளிபரப்புக்குள் பிரவேசிக்க இரண்டு முறைகள் உண்டு.**

1. **Google.com » Ustream.tv » jesusnf (search) » jesusnf (click)**
2. **Google.com » jesusnf.org » Live Telecast**

**கடந்த கால நிகழ்ச்சிகளை கணனி நேரடி ஒளிபரப்பின் மூலம் காண வேண்டுமானால்**

❁ **Google.com » jesusnf.org » Live Telecast**
வலது பக்கத்தில் கடைசியில் இருக்கும் Ustream யை க்ளிக் செய்ய வேண்டும்.



மேலதிக விபரம்: சகோதரன் திலிப் ராஜ் குமார் ☎ 077-8881823

எபல் , என்ட்ரோயிட் கையடக்க தொலபேசியிலேயும் டெப் ஆகியவற்றிலும் காண்பதற்கு Ustream APP Download செய்து jesusnf என்பதை Search செய்யவும்.




# இயேசுகிறிஸ்துவுக்கு மகிமை உண்டாவதாக!!!

**37 வது வெளியீடு**

இயேசு துணை!!!

போதகர் ஏ.ஜே.ஜோசப்



ஜீவ மன்னா தின தியான புத்தகத்தை தபால் மூலம் ஒவ்வொரு மாதமும் பெற்றுக் கொள்ளலாம். விலாசத்தை அனுப்பவும்.

R/N:- QD/38/News/2014


# இயேசு கைவிடார் சுவிசேஷ பணியகம்

இல 33/1, புதிய களனிப் பால வீதி, கொழும்பு -14.

☎ 011-2334865 ✆ 071-4922929

✉ arulandu.joseph@gmail.com 🌐 www.jesusnf.org


இல 33:1 புதிய களனிப் பால வீதி, கொழும்பு -14, ஜீவ மன்னா குட் நிவ்ஸ் பிரின்டஸ் அச்சகம் மூலம் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது